விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 24
ஒலி 323 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 21 செவ்வாய்க்கிழமை (07.11.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/=



## தேர்தல் இல்லையேல் மக்கள் மீண்டும் வீதிக்கு இறங்குவார்கள்



### ஜே.வி.பி தலைவர் அநுர

(கொழும்பு)

அடுத்த வருடம் ஒக்ரோபர் 17ஆம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டும் என்றும், அரசியலமைப்பின் பிரகாரம் தேர்தலை நடத்தாவிட்டால் மக்கள் மீண்டும் வீதிக்கு இறங்குவார்கள் என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

15

## ரூ.40 இலட்சம் பெறுமதியான ஐஸ் போதை மன்னாரில் மீட்பு!

### உள்ளூர் விற்பனை முகவரும் கைது




(மன்னார்)

மன்னாரில் நீண்ட காலமாக போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்ட நபர் மற்றும் அவரிடமிருந்து 40 இலட்சம் பெறுமதியானபோதை பொருளை

15

## தீவகப் பகுதிகளுக்கு சீனக்குழு இன்று விஜயம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள சீனத் தூதுவர் தலைமையிலான குழுவினர் இன்று நயினா

15

தெற்கைச் சேர்ந்தவர்

## யாழ்ப்பாணத்தில் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் தங்குமிடம் ஒன்றில் இருந்து ஆணொருவரின் சடலம் நேற்று திங்கட்கிழமை மீட்கப்பட்டுள்ளது.

தென்னிலங்கையை சேர்ந்த லால் பெரேரா (வயது-61) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

15

### சீனாவிலிருந்து வடக்குக்கு கடலுணவு இறக்குமதி செய்யப்படாது

# வடக்கு மக்களுக்கு பாதகம் ஏற்படுத்தோம்

### யாழில் சீனத் தூதுவர் தெரிவிப்பு



*(யாழ்ப்பாணம்)*

*வடக்கு மக்களுக்கு பாதகம் ஏற்படும் வகையில் சீன அரசாங்கம் எதுவும் செய்யாது எனத் தெரிவித்துள்ள இலங்கைக்கான சீனத் தூதுவர் கி ஸென் ஹொங், சீனாவிலிருந்து இலங்கைக்கு கடலுணவு இறக்குமதி செய்யப்படாது என சுட்டிக்காட்டியுள்ளார்.*

*(02ஆம் பக்கம் பார்க்க)*

## அமெரிக்கா இலங்கைக்கு என்றுமே துணை நிற்கும்

### அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்



(கொழும்பு)

அமெரிக்கா இலங்கைக்கு என்றுமே துணை நிற்கும் என அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் மற்றும் கல்வி அமைச்

15

இஸ்ரேலின் தாக்குதலில்

## காசாவில் உயிரிழந்தோர் தொகை 10 ஆயிரத்தைத் தாண்டியது

(காஸா)

காஸாவில் இஸ்ரேலிய தாக்குதல்களால் உயிரிழந்த பலஸ்தீனர்களின்எண்ணிக்கை 10 ஆயிரத்தை தாண்டியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஒக்டோபர் 7ஆம் திகதி காஸா பகுதிக்கு அருகில் உள்ள இஸ்ரேலிய குடியிருப்புகள் மீது ஹமாஸ் போராளிகள் நடத்திய தாக்குதல்களின் விளைவாக சுமார் 1,400 பேர் கொல்லப்பட்டனர்.

இதன் எதிரொலியாக ஹமாஸ்

15

## கோட்டாவின் வீழ்ச்சியின் பின்னணியில் இந்தியா

### வசந்த பண்டார குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை விரட்டிவிட்டு ரணில் விக்கிரமசிங்கவை ஆட்சிக்கு கொண்டுவந்ததன் பின்னணியில் இந்தியா செயற்பட்டுள்ளது என பரபரப்பானதொரு குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் பொதுச்செயலாளர் கலாநிதி வசந்த பண்டார.

'அறகலயவின்' பின்னணியில் இந்தி

15

## அரிசி உற்பத்தியில் இலங்கை தன்னிறைவு அடைய வேண்டும்

### விவசாய அமைச்சுக்கு ஜனாதிபதி பணிப்பு

(கொழும்பு)

இலங்கையை அரிசியில் தன்னிறைவு அடையும் வகையில் நாட்டில் நெற்செய்கையை இரட்டிப்பாக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விவசாய அமைச்சுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

தற்போது இலங்கை நெல் உற்பத்தியில் தன்னிறைவு அடைந்துள்ள நிலையில், நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து

02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



இவர்கள் இருவரும்
இலங்கை
அதிபர் சேவை தரம் III
இல் பதவியுயர்வு
பெற்றுள்ளதையிட்டு
மனதாரப்
பாராட்டுவதுடன்
அவர்களின்
பணி மேன்மேலும்
சிறப்படைய
வாழ்த்துகின்றோம்.



எமது கல்லூரியின் நாடகத்துறை ஆசிரியர்
**திரு. துரைசிங்கம் அயூரன்**
NDT. Drama, BA, PGDE, MED, Dip.in Hons SLPS III

Best Wishes

எமது கல்லூரியின் அரசியல் விஞ்ஞான பாட ஆசிரியர்
**திரு. தம்பிராஜா சிவகுமார்**
B.A, M.A, PGDE, SLPS III

(C-7572) **ஆசிரியர் - ஊழியர் நலன்புரிக் கழகம், யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை.**

---

## மலிவு விற்பனை

கடந்த 40 வருடங்களாக யாழ்.மக்களின் நன் மதிப்பைப் பெற்ற SILVER SHIELD SOCKS
பாடசாலை மாணவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற நைலோன்/ கொட்டன்
காலுறைகள் (SOCKS) மலிவு விலையில்

**மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும்**

உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து ஒருசில நிமிடங்களில் உங்கள் பணத்தை

WESTERN UNION MONEY TRANSFER | Ria | MoneyGram. money transfer

ஊடாக பெற்றுக்கொள்ளவும். (C-7558)

**ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்**
**303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.**
**021 222 5392, 076 315 6470**

---

## 1 நாள் கோழிக்குஞ்சுகள் விற்பனைக்குண்டு

பிறிமா பாம் ஒருநாள் சிவப்பு, வெள்ளை முட்டைக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. ஒவ்வொரு வியாழக்கிழமையும் பெற்றுக் கொள்ள முடியும். தேவை உள்ளவர்கள் முற்பதிவு செய்யவும். பண்ணையாளர்களுக்கு விநியோகம் இலவசம்.

**நியூ சிற்றி பாம்**
**சின்னக்கடை மாக்கற் முன்பாக**
**குருநகர், யாழ்ப்பாணம்.**
(17688)

---

## RAVEENS EMC
KARAVEDDY

## WANTED

- Administrator (As director)
- Science Graduate(Bio) (Male or Female)

Contact No:
**021 226 3321**
**076 416 9845**
P.Easwaranarthan (Director)
(C-7575)

---

## வடக்கு மக்களுக்கு...

சீன தூதுவர் தலைமையிலான குழுவினர் நேற்று யாழ்ப்பாண மாவட்டத்திற்கு விஜயம் செய்து நெடுந்தீவு பிரதேச மக்களுக்காக 500 உலருணவுப் பொதிகளை யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் கையளித்தனர். இந்நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே இலங்கைக்கான சீன தூதுவர் கி ஸென் ஹொங் இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், பொருளாதார நெருக்கடியின் போது இலங்கையுடன் பொருளாதாரத்தை உயர்த்த முதலாவதாக சீனாவே கை கொடுத்தது.

இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சீனா சென்றபோது இலங்கை கடலுணவை சீனாவுக்கு ஏற்றுமதி செய்ய ஒப்பந்தம் செய்யப்பட்டது. சீனாவில் இருந்து இலங்கைக்கு கடலுணவு இறக்குமதி செய்யப்படாது. விசேடமாக வடக்கு மாகாணத்திற்கு கடலுணவு இறக்குமதி செய்யப்படாது.சீனா உலகின் இரண்டாவது மிகப்பெரிய பொருளாதார நாடு. மிகப்பெரிய சந்தை வாய்ப்பு உள்ளது. உங்களை அதற்கே வரவேற்கிறோம். சீன தொழிற்துறையினர் முதலீட்டாளர்கள் வடக்கில் முதலிட ஆர்வமாக உள்ளனர். வடக்கு மக்களும் அதனை வரவேற்க தயாராகவுள்ளனர் என்று நம்புகிறேன் என்றார். (ம-7,33,104)

*(மேலும் ஒரு செய்தி உள்ளே)*

---

## மரண அறிவித்தல்

தோற்றம்
1942 . 09 . 05



மறைவு
2023 . 11 . 06

### திருமதி படிகலிங்கம் சொர்ணகாந்தி

இல.38, கச்சேரி நல்லூர் வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி படிகலிங்கம் சொர்ணகாந்தி அவர்கள் 06.11.2023 அன்று காலமானார்.

அன்னார் கந்தையா சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சதாசிவம் படிகலிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கருணானந்தம் (பெரியதம்பி), செல்வரத்தினம், தியாகராஜா மற்றும் பரமேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற (DR) றஞ்சினி மற்றும் கௌரி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் பரராஜசிங்கம் ஸ்ரீகாந்தனின் (கனடா) அன்பு மாமியாரும் நிருஜா, அக்ஷராவின் பேர்த்தியும் விஷாந்தின் பூட்டியும் பரஞ்சோதி (பிரான்ஸ்), காலஞ்சென்ற ரங்கநாதன், ரவீந்திரன் (பிரான்ஸ்), தர்சினி (கனடா), தர்மினி (சமூகசேவை அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், நல்லூர்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் தனேஸ்வரி, மாலினி, சயந்தினி (பிரான்ஸ்), சிவநேசநாதன் (கனடா), றஜீபன் (கலாசார உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், காரைநகர்) ஆகியோரின் மாமியும் நிருஜன் (மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்), நிருஜா, நிதர்சன், நிசாந்தன் (பிரான்ஸ்), பிரிந்தினி (மானிப்பாய் மெமோறியல் வைத்தியசாலை), கௌதம், அபிஷாந், ஸ்வேதா (பிரான்ஸ்), திரிஷா, தானியா, ரெசிக்கா (கனடா), அபிநயா (யா/வேம்படி உ.பா), ஹரீஷணன் (யா/இந்து) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.11.2023) மதியம் 12 மணியளவில் இல.38, கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.38, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.
(17690)

தகவல்: குடும்பத்தினர்
தர்மினி : 077 904 2390

---

## அரிசி உற்பத்தி...

நெற்செய்கைகளிலும் ஒரே மாதிரியான அறுவடையை பெற முடியவில்லை.

எனவே விவசாயிகளுக்கு நெல் விளைச்சலை அதிகரிக்க புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தும் அதேவேளை விசேட வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார். (ம-7)

---

## பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை

யாழ். நகரில் இயங்கும் நிறுவனம் ஒன்றுக்கு பகல் நேர பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை.
வயது : 40- 65
(யாழ். நகருக்கு அண்மையில் இருப்பவர்களுக்கு முன்னுரிமை)
. தொடர்புகளுக்கு
**076 097 3121**

---

## கல்யாணமாலை
(இலவச திருமண சேவை)

## பதவி வெற்றிடம்

**முகாமைத்துவ உதவியாளர் (பெண்கள்)**

- வயதெல்லை – 40 இற்கு மேல்.
- அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.
- யாழ். நகரத்திற்கு அண்மையாக இருப்பவர்களுக்கு முன்னுரிமை

தொடர்புகளுக்கு
**076 097 3121**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனத்தூதுவர் தலைமையிலான குழுவினர்

# யாழில் பல இடங்களை பார்வையிட்டனர்






யாழ்ப்பாணத்திற்கு நேற்று திங்கட்கிழமை விஜயம் மேற்கொண்டுள்ள சீனத் தூதுவர் தலைமையிலான குழுவினர் யாழ்ப்பாண பழைய கச்சேரி கட்டடத் தொகுதியை பார்வையிட்டதுடன் வடமராட்சி சக்கோட்டை முனைக்கு விஜயம் செய்தனர்.

(படங்கள்:-சிவசாந்தன், மகாலிங்கம்)

## கிளிநொச்சி-கனகபுரம் பகுதியில் தொடரும் கால்நடைகள் திருட்டு

### பொதுமக்கள் கவலை



(கிளிநொச்சி)

கிளிநொச்சி - கனகபுரம் பண்ணை பகுதிகளில் தொடர்ச்சியாக கால்நடைகள் திருடப்பட்டு வருவதோடு களவுகளும் இடம்பெற்று வருகிறது என பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

வாழ்வாதாரத்திற்காக வளர்க்கப்பட்டு வருகின்ற கால்நடைகள் திருடப்பட்டு பராமரிப்பு இன்றி காணப்படுகின்ற காணிகளுக்குள் வெட்டப்படுவதாகவும் இதனால் பல குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் பகல் வேளைகளில் வீடு புகுந்து கத்தி முனையில் பணம், நகைகள் என்பனவும் கொள்ளையிட்டு சென்ற சம்பவங்களும் இடம்பெற்றுள்ளதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதனால் இரவு வேளைகளில் மட்டுமன்றி பகல் வேளைகளிலும் வீடுகளில் தனியாக இருப்பது அச்சத்தை தருவதாகவும் பொலிஸ் நிலையங்களில் பல முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ள போதும் பொலிஸார் நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (நி-5-6)

## கண்காட்சி

(சாவகச்சேரி)

வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு அமைப்பின் ஏற்பாட்டில் தமிழ் மக்களுக்கான கௌரவமான அரசியல் தீர்வு செயற்பாட்டின் 100 ஆவது நாள் செயற்பாட்டின் ஒரு வருட பூர்த்தியை முன்னிட்டு வடக்கு கிழக்குத் தமிழர்களின் சமஷ்டிக் கோரிக்கையின் தோற்றம் தொடர்பான கண்காட்சி மற்றும் தெளிவூட்டல் நிகழ்வு ஆகியன நாளை புதன்கிழமை முற்பகல் 10மணி தொடக்கம் 5 மணிவரை நல்லூர் சங்கிலியன் பூங்கா மண்டபத்தில் இடம்பெறும் என வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு தெரிவித்துள்ளது. (நி-5-6)

## நிர்வாகத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலகத்திற்குட்பட்ட ஜே/112, திருநெல்வேலி தென்கிழக்கு கிராம அலுவலர் பிரிவினது முதியோர் நலன்புரிச் சங்கத்தின் 2023/2024 காலப்பகுதிக்கான புதிய நிர்வாக சபைத் தெரிவுகள் கடந்த மாதம் 10 ஆம் திகதி இடம்பெற்றது.

இதன்போது தலைவர் இ.இரத்தினசிங்கம், உபதலைவர் தி.ஸ்ரீஸ்கந்தராசா, செயலாளர் சி.அமிர்தலிங்கம், உபசெயலாளர் திருமதி.பே.சுகுமார் மற்றும் பொருளாளர் த.தனபாலசிங்கம் இவர்களுடன் ஆறு நிர்வாகசபை உறுப்பினர்களும் உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவரும் தெரிவாகியுள்ளனர். (நி-5-6)



கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் நடைபெற்ற அகில இலங்கை தமிழ் மொழித்தின இலக்கிய நாடகப் போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி முதலாம் இடத்தினை பெற்றுக் கொண்டது. (படம்:- சிவசாந்தன்)


## மரண அறிவித்தல்

### இன்னாசிமுத்து மரியநாயகம்

தோற்றம்
1945.11.20



மறைவு
2023.11.05

பெரியவிளான் இளவாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இன்னாசிமுத்து மரியநாயகம் 05.11.2023 அன்று காலமாகிவிட்டார்.
அன்னார் காலம் சென்ற மேரி றோசலின் அன்புக் கணவரும் காலம் சென்ற இன்னாசிமுத்து விக்ரோரியாபிள்ளையின் அன்பு மகனும் காலம்சென்ற நீக்கிலாப்பிள்ளை மரியம்மாவின் அன்பு மருமகனும் எமில், நிமல் சுதா, டனி, ஜெனி, வினி, சைலு ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்வம், புஸ்பா, ஜெயக்குமார், விணோ, மெற்றில்டா, நவின் ஆகியோரின் அன்பு மாமனாரும் ராஜ், அபிஷா, வினுஷா, அபிஷேக், அபினாஸ், ஜெனோசியா, டிஷான், டினுஜா, துஷாரா, றொனால்டோ, செரோமிக்கா, பவிஸ்ரன், டீபிகா, அஸ்வின், அனுஷ்கா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.
அன்னாரின் நல்லடக்கம் 07.11.2023 இன்று செவ்வாய்க்கிழமை பி.ப 2.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இருந்து எடுத்துச் சென்று புனித யுவானியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுத்து, யுவானியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பெரியவிளான்,
இளவாலை.

(C-7570)

தகவல்
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இலங்கையை வென்றது பங்களாதேஷ்

## அசலன்காவின் சதம் வீண்



2023ஆம் ஆண்டுக்கான உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் இலங்கைக்கு எதிரான போட்டியில் பங்களாதேஷ் 3 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணி முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தது.

இதற்கமைய, முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 49.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 279 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. அணிசார்பில் அதிக படியாக சரித் அசலன்க 108 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தார்.

இவர் ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் பெற்ற இரண்டாவது சதம் இதுவாகும்: பந்துவீச்சில், பங்களாதேஷ் அணியின் தன்சிம் ஹசன் சாகிப் 80 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், ஷகிப் அல் ஹசன் 57 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.



இந்தநிலையில், 280 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 41.1 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. அணிசார்பில், அதிகபடியாக நஜ்முல் ஹொசைன் சாண்டோ 90 ஓட்டங்களையும், ஷகிப் அல் ஹசன் 82 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்துவீச்சில், இலங்கை அணியின் தில்ஷான் மதுஷங்க 69 ஓட்டங்களுக்கு 3 விக் கெட்டுக களை கைப்பற்றினார். (ம-7)

### சர்வதேச கிரிக்கெட்டில் முதல் முறையாக

# ‘டைம் அவுட்’ முறையில் அவுட்டான மத்யூஸ்

இலங்கை மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான உலகக் கிண்ணப் போட்டியில் எஞ்சலோ மத்யூஸ் ‘Time Out’ (டைம் அவுட்) முறையில் துரதிஷ்டவசமாக ஆட்டமிழந்து வெளியேறினார்.



எஞ்சலோ மத்யூஸ் ஆடுகளத்துக்கு துடுப்பெடுத்தாட வரும்போது உரிய நேரத்துக்குள் (2 நிமிடங்கள்) ஸ்டம்புக்கு வராததால் அவர் ‘Time Out’ முறையில் Run out வீரராக அறிவிக்கப்பட்டார்.

சர்வதேச கிரிக்கெட் போட்டி ஒன்றில் இதுபோன்ற ஆட்டமிழப்பு இடம்பெறுவது இதுவே முதல்முறை.

146 வருட வரலாற்றைக் கொண்ட சர்வதேச கிரிக்கெட்டில் டைம் அவுட் செய்யப்பட்ட முதல் துடுப்பாட்ட வீரராக எஞ்சலோ மத்யூஸ் பதிவானார்.

போட்டி விதிமுறைகளின் பிரகாரம் ஒரு வீரர் தனது இன்னிங்ஸை 2 நிமிடங்களுக்குள் தொடங்க வேண்டும்.

எஞ்சலோ மத்யூஸ் துடுப்பெடுத்தாட ஆடுகளம் வந்தபோது அவரது ஹெல்மெட்டின் பட்டி கழன்றதால், மாற்று ஹெல்மெட் கொண்டு வரப்படும் வரை காத்திருக்க வேண்டியிருந்தது. இந்த தாமதத்தின் போது, பங்களாதேஷ் அணியின் தலைவர் ஷேக்கிங் மேல்முறையீடு செய்ய, நடுவர்கள் பங்களாதேஷுக்கு சாதகமாக தீர்ப்பளித்தனர். (ம-7)







### எதிர்வரும் 6 மாதங்களுக்குள் இலங்கை கிரிக்கெட் கட்டியெழுப்பப்படும்

#### அர்ஜீன ரணதுங்க



இலங்கை கிரிக்கெட்டின் அழிவுக்கு கிரிக்கெட் நிர்வாக சபையே காரணம் என இலங்கை கிரிக்கெட் இடைக்கால குழுவின் தலைவர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்தார்.

இலங்கை கிரிக்கெட்டை எதிர்வரும் ஆறு மாதங்களுக்குள் கட்டியெழுப்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் பணிகள் இந்திய ஒப்பந்தக்காரர்களுக்கு ஏற்ற வகையில் நடைபெறுவதாக அர்ஜுன ரணதுங்க குற்றச்சாட்டுகளை சுமத்தியுள்ளதுடன், சாகல ரத்நாயக்கவின் ஊடாக கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையில் ஜனாதிபதி இணைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

கிரிக்கெட்டின் தற்போதைய வீழ்ச்சிக்கு முன்னாள் வீரர்களான சங்கக்காரவும் மஹேல ஜெயவர்தனவுமே காரணம் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தான் விரும்பும் அணியுடன் கிரிக்கெட்டை கட்டியெழுப்ப அதிகாரம் வழங்கப்பட்டால், ஆறு மாதங்களுக்குள் மீண்டும் எமது கிரிக்கெட்டை கட்டியெழுப்ப தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

விளையாட்டுத்துறை அமைச்சர் கிரிக்கெட்டைக் கட்டியெழுப்ப விரும்புவதாகவும், ஆனால் கிரிக்கெட் நிர்வாகக் குழு அதற்கு அனுமதிக்காது என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (ம-7)

### உலகக் கிண்ண கிரிக்கெட் - 2023 புள்ளிகள் பட்டியல்

| நிலை | அணி | போட்டி | வெற்றி | தோல்வி | புள்ளி |
|---|---|---|---|---|---|
| 1 | இந்தியா | 8 | 8 | 0 | 16 |
| 2 | தென்னாபிரிக்கா | 8 | 6 | 2 | 12 |
| 3 | அவுஸ்திரேலியா | 7 | 5 | 2 | 10 |
| 4 | நியூசிலாந்து | 8 | 4 | 4 | 8 |
| 5 | பாகிஸ்தான் | 8 | 4 | 4 | 8 |
| 6 | ஆப்கானிஸ்தான் | 7 | 4 | 3 | 8 |
| 7 | பங்களாதேஷ் | 8 | 2 | 6 | 4 |
| 8 | இலங்கை | 8 | 2 | 6 | 4 |
| 9 | நெதர்லாந்து | 7 | 2 | 5 | 4 |
| 10 | இங்கிலாந்து | 7 | 1 | 6 | 2 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மீனவர்களின் கைதினை கண்டித்து இராமேஸ்வரத்தில் உணவு தவிர்ப்பு போராட்டம்



(சென்னை)

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள 64 தமிழக மீனவர்களையும் விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி இராமேஸ்வரத்தில் நேற்று பாரிய உண்ணாவிரத போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இராமேஸ்வரம்அனைத்து விசைப்படகு மீனவச் சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் முன்னெடுக்கப்பட்ட இப் போராட்டத்தில் கைது செய்யப்பட்ட மீனவர்களின் உறவினர்கள் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது இலங்கை வசம் உள்ள 133 விசைப் படகுகள் மற்றும் நாட்டுப் படகுகளை உடனடியாக விடுவிக்குமாறு வலியுறுத்திய போராட்டக்காரர்கள், தமிழக மீனவர்களின் கைது நடவடிக்கையைத் தடுக்க தவறிய மத்திய, மாநில அரசுகளுக்கு எதிராக கோஷங்கள் எழுப்பினர்.

இதேவேளை இப்போராட்டம் காரணமாக 2 நாட்கள் மீன் பிடிக்கக் கடலுக்குச் செல்லப் போவதில்லை எனவும் மீனவர்கள் அறிவித்துள்ளனர். (நி-5-6)

## கிரிக்கெட்டால் அரசியலில் குழப்பம் கடும் விசனத்தில் ஜனாதிபதி

(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் சபைக்கான இடைக்கால குழு நியமனம் தொடர்பில் அரசாங்கத்திற்கோ அல்லது தமக்கோ எதுவும் தெரியாது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க இடைக்கால கிரிக்கெட் குழுவொன்றை நியமித்துள்ளதாக ஊடகங்களில் வெளியான செய்திகள் தொடர்பில் ஜனாதிபதியுடன் சந்திப்பிலிருந்த அமைச்சர்கள் சிலர் கேள்வி எழுப்பிய போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இடைக்கால கிரிக்கெட் குழுவிற்கு நியமிக்கப்பட்ட உறுப்பினர்களின் பெயர்கள் கூட அனுமதிக்காக விளையாட்டுத்துறை அமைச்சர் தெரியப்படுத்தவில்லை.

கிரிக்கெட் போன்ற நிறுவனங்களுக்கு இடைக்கால குழுவை நியமிக்கும் போது ஜனாதிபதிக்கு அறிவிக்கப்பட வேண்டும்.

ஆனால் இம்முறை விளையாட்டுத்துறை அமைச்சர் இந்த விடயத்தை ஜனாதிபதிக்கு தெரிவிக்கவில்லை.

இதேவேளை விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் ஜனாதிபதி அலுவலகத்திற்கு அழைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## வீழ்ச்சியடையும் இலங்கை ரூபா

(கொழும்பு)

இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்துள்ளது.

இந்த நிலையில், இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்டுள்ள நாணய மாற்று விகிதங்களின்படி, அமெரிக்க டொலரின் விற்பனை விலை 334.40 ரூபாவாகவும், கொள்வனவு விலை 323.94 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

மேலும், கனேடிய டொலரின் விற்பனை விலை 246.51 ரூபாவாகவும், கொள்வனவு விலை 235.57 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது. இதன்படி, யூரோ ஒன்றின் விற்பனை பெறுமதி 360.90 ரூபாவாகவும், கொள்வனவு பெறுமதி 346.04 ரூபாவாகவும் அதே சமயம், ஸ்டெர்லிங் பவுண்டின் விற்பனை பெறுமதி 415.41 ரூபாவாகவும், கொள்வனவு பெறுமதி 399.48 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது. (நி-5-6)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 350 | 350 | 250 | 300 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 400 | 350 | 350 | 450 |
| தக்காளி | 260 | 220 | 200 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 100 | 150 | 150 |
| கோவா | 350 | 200 | 240 | 300 |
| கரட் | 350 | 350 | 350 | 400 |
| பூசணி | 80 | 80 | 80 | 100 |
| புடோல் | 200 | 200 | 150 | 240 |
| வாழைக்காய் | 200 | 180 | 180 | 250 |
| சின்ன வெங்காயம் | 350 | 350 | 350 | 450 |
| பெரிய வெங்காயம் | 300 | 270 | 300 | 350 |
| பாகற்காய் | 300 | 400 | 350 | 400 |
| வெண்டக்காய் | 250 | 200 | 150 | 300 |
| கருணைக் கிழங்கு | 140 | 100 | 120 | 400 |
| பயிற்சிங்காய் | 400 | 300 | 250 | 300 |
| லீக்ஸ் | 200 | 200 | 200 | 300 |
| பீற்றூட் | 250 | 140 | 150 | 300 |
| கறிமிளகாய் | 500 | 350 | 500 | 400 |
| முருங்கைக்காய் | 400 | 300 | 300 | 400 |
| போஞ்சி | 400 | 500 | 400 | 400 |
| கத்தரிதம்புள்ள | 320 | 200 | 250 | 300 |
| கீரை – 1 பிடி | 100 | 80 | 80 | 120 |
| தேசிக்காய் | 1400 | 1200 | 1400 | 1600 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 90 | 80 | 70-90 |
| இராசவள்ளி | 450 | 450 | 500 | 550 |
| வெங்காயப்பூ | 400 | 350 | --- | 400 |
| முள்ளங்கி | 100 | 140 | --- | 200 |
| பொன்னாங்காணி | 80 | 70 | 80 | 60 |
| வல்லாரை | 40 | 30 | 50 | 50 |
| ஈரப்பலா | 120 | 150 | 100 | 150 |

# இராசிபலன்

07.11.2023
ஐப்பசி 21, செவ்வாய்க்கிழமை
நவமி காலை 7.09 மணிவரை

மகம் பிற்பகல் 5.59 மணிவரை
சுபநேரம் 10.35-12.05மணிவரை
இராகுகாலம் 03.05-04.35 மணிவரை

சந்திராஷ்டமம்
உத்தராடம், திருவோணம்.

வளவன்




வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வழிபாடு ஆனந்தம் தரும், சுயமுயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், தாழ்ந்த சுபாவமுண்டு.




தொலைதூரத்திலிருந்து சுபசெய்திகள் வந்து சேரலாம், சுபநிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




பணவரவால் மகிழ்ச்சியடைவீர்கள், பயணங்கள் செல்ல போட்ட திட்டங்கள் கைகூடும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும், புதிய பொருட் சேர்க்கையுண்டு.




உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், தொழில் கவனத்துடன் செயற்படுவது நல்லது, பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம்.




தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், பணி புரியும் இடத்தில் பெயரும் புகழும் கூடும், சுகங்களும் சந்தோஷங்களும் அதிகரிக்கும் நாள்.




மனக்குழப்பம் அகல மாற்றினத்தவர்கள் உறுதுணை புரிவர், குடும்பப் பொறுப்புகள் கூடும் வாய்ப்புண்டு, வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள்.




பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம்.




புதிய தொழில் வாய்ப்புகள் தேடி வரலாம், குடும்பத்தில் சுபநிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள்.




வம்பு வழக்குகளை சமாளித்து வளம் காணும் நாள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும்.




தேவையற்ற சஞ்சலங்களைத் தவிர்ப்பது நல்லது, ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சயனசுகக் குறைவான நாள்.




ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், எதிர்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், வீண்பழிகள் அகல விரைந்து நடவடிக்கை எடுப்பீர்கள், பயணங்கள் கைகூடும்.




எளிமையான காரியங்களை எளிதில் செய்து முடிப்பீர்கள், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, ஆரோக்கியம் சீராகும், போசன சுகமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றை மறக்க விரும்பினால் அதுதான் நினைவில் நிற்கும்.

# வடக்கில் முதலீடு செய்ய சீன முதலீட்டாளர்கள் ஆர்வம்

## யாழில் சீனத்தூதுவர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**சீன தொழிற்றுறையினர், முதலீட்டாளர்கள் வடக்கில் முதலிட ஆர்வமாக உள்ளதாகவும் அதனை வடக்கு மக்களும் வரவேற்க தயாராக இருப்பார்கள் என நம்பிக்கை வெளியிட்டுள்ள இலங்கைக்கான சீன தூதுவர் கீ சென் ஹொங்.**

சீன தூதுவர் தலைமையிலான குழுவினர் நேற்று யாழ்ப்பாண மாவட்டத்திற்கு விஜயம் செய்து நெடுந்தீவு பிரதேச மக்களுக்காக 500 உலருணவுப் பொதிகளை யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் கையளித்தனர்.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே இலங்கைக்கான சீன தூதுவர் கீ சென் ஹொங் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இரண்டு ஆண்டுகளுக்கு பின்னர் நான் வடக்கு மாகாணத்திற்கு வந்துள்ளேன். கடந்த முறை வடக்கில் நீர் சுத்திகரிப்பு இயந்திரங்களை ஒவ்வொரு மாவட்டத்திற்கும் வழங்கினோம்.

மேலும் பொருளாதார நெருக்கடியின் போது இலங்கையுடன் பொருளாதாரத்தை உயர்த்த முதலாவதாக சீனாவே கை கொடுத்த சீனா, எதிர்காலத்திலும் கைகொடுக்கும்.



15 மில்லியன் ரூபாய் பெறுமதியான உதவிகளை 5 மில்லியன் உணவு பொருட்களாகவும் 5 மில்லியன் மீனவர்களுக்காகவும் 5 மில்லியன் வீட்டு திட்டத்திற்கும் சீனா வழங்கவுள்ளது என தெரிவித்தார். (நி-5-6-33)

## வடக்கு பிரச்சினைகள் தொடர்பாக பிரதமருடன் கலந்துரையாடிய சமத்துவக் கட்சி



(கொழும்பு)

வடக்கில் நிலவுகின்ற பல வேறு பிரச்சினைகள் தொடர்பில் பிரதமர் தினேஸ் குணவர்த்தனவுடன் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளருமான மு.சந்திரகுமார் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

நேற்று கொழும்பிலுள்ள அவரது அலுவலகத்தில் இச் சந்திப்பு இடம்பெற்றது. இதன் போது வடக்கில் வனவள திணைக்களத்தினால் கையகப்படுத்தப்படுத்தப்பட்டுள்ள பொது மக்களின் காணி மற்றும் விவசாய நிலங்கள், வடக்கில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற குடிநீர் விநியோக திட்டங்களின் போது ஏற்படுகின்ற தடைகள், உள்ளூராட்சி மன்றங்களுக்குச் சொந்தமான வீதிகளை விசேட நிதி ஒதுக்கீட்டின் கீழ் புனரமைக்க வேண்டிய தேவைகள், பொதுநிர்வாக உள்நாட்டலுவலர்கள் அமைச்சின் கீழ் நிலவுகின்ற வளப் பிரச்சினைகள் என்பன தொடர்பில் பிரதமரின் கவனத்திற்கு கொண்டுசெல்லப் பட்டது.

குறித்த விடயங்களை கேட்டறிந்து கொண்ட பிரதமர் சில விடயங்கள் தொடர்பில் உடனடியாக கவனம் செலுத்துவதாகவும் ஏனைய விடயங்களில் எதிர்காலத்தில் கவனம் எடுப்பதாகவும் தெரிவித்தார். (நி-5-6)

## வடமாகாண கல்விச் செயலரை சந்தித்த அதிபர்கள் சங்க பிரதிநிதிகள்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண அதிபர்கள் சங்க பிரதிநிதிகள், வடமாகாண கல்விச் செயலாளர் பற்றிக் நிரஞ்சனுடன் கல்வி அபிவிருத்தி மற்றும் பாடசாலைகள் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று அண்மையில் வட மாகாண கல்வியமைச்சில் இடம்பெற்றது.

இக் கலந்துரையாடலில் வடமாகாண அதிபர்கள் சங்கத்தின் தலைவர் த.ஜெயந்தன், செயலாளர் கு.திலீபன், பொருளாளர் தி.வரதன், இணைப்பாளர் பொ.நடேசலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர். (நி-5-6)

### பொலிஸாரைக் கண்டதும்

## மணலைக் கொட்டிவிட்டு தப்பியோடிய கடத்தல்காரர்கள்



(யாழ்ப்பாணம்)

டிப்பரில் மணலை கடத்தியவர்கள் பொலிஸாரை கண்டுவிட்டு வீதியிலேயே மணலை கொட்டி விட்டு தப்பித்து ஓடும்போது வீதியோரமாக இருந்த தொலைத்தொடர்பு கம்பங்கள் மீது டிப்பர் வாகனத்தால் மோதி விட்டு சென்றுள்ளனர்.

அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்று அதிகாலை டிப்பரில் மணல் கடத்தப்பட்ட போது பொலிஸார் வாகனத்தை மறித்துள்ளனர்.

இதனையடுத்து டிப்பரில் மணலை கடத்தியவர்கள் வீதியிலேயே மணலை கொட்டி விட்டு தப்பித்து ஓடும்போது வீதியோரமாக இருந்த தொலைத் தொடர்பு கம்பங்கள் சேதமடைந்ததுடன் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பாக அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி-5-6-28)

## யாழ்ப்பாணத்தில் சர்வதேச சதுரங்கப் போட்டி

இந்தியாவில் ஆதி காலத்தில் தோன்றிய சதுரங்க விளையாட்டை உலகிலுள்ள அனைத்து நாடுகளும் ஏற்றுக் கொண்டு தற்பொழுது விளையாடி வருகின்றன. குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை உள்ள எல்லா வயதினரும் எளிதாக கற்றுக் கொண்டு விளையாடக் கூடிய ஒரு விளை யாட்டாக சதுரங்கம் திகழ்கிறது. யாழ்ப்பாணத்தில் நிறைய திறமையான சதுரங்க வீரர்கள் இருந்தாலும் அதில் ஒரு சிலரே FIDE Rating ஐ வைத்திருக்கின்றனர்.

அதற்கு முதல் காரணம் அவர்களுக்கு கிடைக்கும் சர்வதேச தரத்திலான சதுரங்க போட்டி வாய்ப்புகள் தான். சர்வதேசதர போட்டிகளில் பங்குபற்றுவதற்கு கொழும்பு, கண்டி போன்ற மாவட்டங்களுக்கு செல்ல வேண்டும். அதுவும் சொந்த செலவில் தான். சர்வதேச தர போட்டி அனுபவம் என்பது சாதாரண உள்ளூர் போட்டிகளை விடமுற்றிலும் வேறானது.

யாழ்.மாவட்ட சதுரங்க சம்மேளனத்தின் முயற்சியின் பலனாக யாழ்ப்பாணத்தில் சர்வதேச தரத்தினாலான சதுரங்கப் போட்டி வருகின்ற மார்கழி மாதம் 8 ஆம் திகதி தொடக்கம் 12 ஆம் திகதி வரை "யாழ்ப்பாண சர்வதேச சதுரங்க போட்டி 2023" என்ற தலைப்பில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் சுமார் 800 இற்கு மேற்பட்ட வீரர்கள் இலங்கையின் சகல பகுதிகளிலிருந்தும் பங்குபற்றுவார்கள் என எதிர்பார்க்கப்படுவதோடு தமிழ் நாட்டில் இருந்தும் சில வீரர்கள் பங்குபற்றுவார்கள் என எதிர்பார்க்கின்றோம். இப் போட்டிக்காக இதுவரையில் ஒரு சதுரங்க போட்டிக்கு இலங்கையில் கொடுக்கப்பட்ட பரிசுத் தொகையை விட அதிகமான பரிசுத் தொகை அறிவிக்கப்பட்டுள்ளது. சுமார் 150 இற்கு மேற்பட்டவர்களுக்கு பரிசு கிடைக்கும் விதமாக வரையறுக்கப்பட்டுள்ளதால் சகல வயது பிரிவினரும் இரு பாலரும் இதில் கலந்து பரிசில்கள் பெறுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் ஏற்படுத்தப் பட்டுள்ளது.



இப் போட்டியானது யாழ்ப்பாணத்தில், ஏன்வட மாகாணத்தில் நடைபெறும் முதலாவது சர்வதேச போட்டியாகும். இதனால் எமது பிரதேசத்தில் உள்ள சதுரங்க வீரர்கள் தங்களின் சர்வதேச தரத்தை (FIDE Rating) கூட்டுவதற்கு இப் போட்டி யானது மிகவும் பயனுள்ளதாக அமையும். இச் சந்தர்ப்பத்தை சரியாக பயன்படுத்தி சதுரங்க வீரர்கள் சர் வதேச தர சதுரங்கத்தில் பிரகாசிப்பார்கள் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை. எம்மாணவர்களின் எதிர் காலத்தைக் கருத்தில் கொண்டு சர்வதேச போட்டிக்கான எமது இத்தனை வருட கனவை நேர்த்தியான முறையில் பூர்த்தி செய்வதற்கு அனைவரது ஆதரவையும் அனுசரணையையும் எதிர்பார்த்து நிற்கிறோம்.

தலைவர்,
யாழ்.மாவட்ட சதுரங்க சம்மேளனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடல் எடை அதிகரிப்பால் பாடசாலை மாணவர்களிடையே மாரடைப்பு ஏற்படும் அபாயம்

## மருத்துவர் ரேணுகா எச்சரிக்கை

**(கொழும்பு)— பாடசாலை மாணவர்கள் மத்தியில் அதிகரிக்கும் உடல் எடை காரணமாக மாரடைப்பு ஏற்படக்கூடிய அபாயம் காணப்படுவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**

சர்வதேச சுகாதார விஞ்ஞானப் பிரிவின் போசாக்கு அலகு பிரதானி மருத்துவர் ரேணுகா ஜயதிஸ்ஸ இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

அநேகமான மாணவ-மாணவியர் சந்தையில் விற்பனை செய்யப்படும் முறுக்கு, வடை, ரோல்ஸ், பற்றிஸ், டோனட், கேக் உள்ளிட்ட உணவு வகைகளை அதிகம் உட்கொள்கின்றனர்.

சீனி, எண்ணெய் போன்றன அதிகளவில் செறிவான இந்த உணவுப் பொருட்களை உட் கொள்வதனால் சிறு வயதிலேயே பாரிய ஆபத்துக்களை எதிர்நோக்க நேரிடுவதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனால் குறைந்த வயதிலேயே சிலருக்கு மாரடைப்பு, நீரிழிவு நோய்கள் ஏற்படுவதாக குறிப்பிட்டுள்ளார்.

பிள்ளைகள் எண்ணெய் மற்றும் சீனி செறிந்த உணவு வகைகளை தவிர்க்க வேண்டும் எனவும் உடற்பயிற்சியில் ஈடுபட வேண்டும்எனவும் அவர் சிறுவர்களுக்கு அறிவுரை விடுத்துள்ளார். (நி-5-6)



# உரவிலை குறையும்



(கொழும்பு)

MOP உரத்தின் விலை 50 வீதத்தால் குறைக்கப்படவுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இதற்கான அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

உரத்தின் விலையை குறைப்பதற்கான அமைச்சரவைப் பத்திரத்திற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் அங்கீகாரம் வழங்கப்படவுள்ளது.

தற்போது பொதுத்துறை உர நிறுவனங்களில் 28,600 மெற்றிக் தொன் உரம் கையிருப்பில் உள்ளது என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். (நி-5-6)

# எரிவாயு விலை உயராது லாஃப்ஸ் நிறுவனம் அதிரடி



(கொழும்பு)

எரிவாயுவின் விலையை உயர்த்தப் போவதில்லை என லாஃப்ஸ் எரிவாயு நிறுவனத்தின் நிறைவேற்று குழு அதிகாரி நிரோஷன் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

ஒக்டோபர் மாதம் நடைமுறையில் இருந்த விலையிலேயே நவம்பர் மாதமும் எரிவாயுவை விற்பனை செய்வதற்கு லாஃப்ஸ் எரிவாயு நிறுவனம் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

"உலக சந்தையில் எரிவாயுவின் விலையில் ஏற்பட்டுள்ள அதிகரிப்புடன் ஒப்பிடும் போது இம்மாதம் எரிவாயுவின் விலையை அதிகரிக்க வேண்டியிருந்தாலும் நடைமுறையில் இருக்கும் விலையிலேயே இம்மாதம் தொடர்வதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் நிரோஷன் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில், 12.5 கிலோ கிராம் எடை கொண்ட எரிவாயு சிலிண்டரை 3,985 ரூபாவிற்கும் 5 கிலோ கிராம் எடை கொண்ட எரிவாயு சிலிண்டரை 1,595 ரூபாவிற்கும் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-5-6)

# பல்கலை மாணவர்களின் கைதுக்கு நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் கண்டனம்

(லண்டன்)

மட்டக்களப்பில் வடக்கு-கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் மயிலத்தமடு, மாதவணை நிலஅபகரிப்புக்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபட்டு திரும்பும் வழியில் 6 மாணவர்கள் சிங்களப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதை நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் வன்மையாக கண்டிக்கிறது.

தென்தமிழீழத்தின் திருகோணமலை,அம்பாறை மாவட்டங்களின் பெரும்பகுதி தமிழர் நிலத்தை ஆக்கிரமித்தது போன்று மட்டக்களப்பு மாவட்டத்திலும் தொடரும் நில ஆக்கிரமிப்பின் ஒரு பகுதியாக மயிலத்தமடு, மாதவணை நிலங்களை சிங்கள மயமாக்கும் நோக்குடன் அங்கு இருக்கும் பண்ணையாளர்களை துன்புறுத்துதல், கால்நடைகளை கொல்லுதல், சிங்களவர்களை குடியேற்றல், பௌத்த மயமாக்க பௌத்த விகாரைகள நிறுவுதல் என்பன தொடர் முயற்சியாக நடைபெற்று வருவதை எதிர்த்து பண்ணையார்களுடன் இணைந்து தமிழ் மக்கள் தொடர்ந்து போராடி வருகின்றனர்.

இத்தொடர் போராட்டத்தில் கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களுடன் இணைந்து யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டத்தில் பங்குபற்றி திரும்பும் வழியில் பொலிஸாரால் வழிமறித்து கைது செய்ததை நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் வன்மையாக கண்டிக்கிறது. (நி-5-6)

# எந்தக் கட்சிக்கும் ஆதரவளிக்கப் போவதில்லை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா திட்டவட்டம்

(கொழும்பு)

எந்த கட்சிக்கும் ஆதரவளிப்பது குறித்து தீர்மானிக்கவில்லை என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

மேலும் மீண்டும் அரசியலில் ஈடுபடுவதற்காக சுதந்திரக் கட்சிக்குள் விசேட பதவியொன்றை கோரியுள்ளதாக வெளியாகியுள்ள தகவல்களையும் அவர் நிராகரித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவரே என்னிடம் வந்து எனது ஆதரவிற்கு மன்றாடினார். என்றாலும் நான் எந்த கட்சிக்கும் ஆதரவளிக்க தீர்மானிக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-5-6)

# இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள மற்றுமொரு ஆராய்ச்சிக் கப்பல்

## அனுமதியை கோரியுள்ளது சீனா

(கொழும்பு)

சீனா மற்றுமொரு ஆராய்ச்சி கப்பல் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்வதற்கான அனுமதியைக் கோரியுள்ளதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

2024 முற்பகுதியில் மற்றுமொரு ஆராய்ச்சி கப்பல் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்வதற்கான அனுமதியை சீனா கோரியுள்ளது. எனினும் அதற்கான அனுமதி வழங்கப்படவில்லை எனவும் அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சீனக் கப்பல்களின் இலங்கை விஜயம் குறித்த இந்தியாவின் கரிசனைகளின் மத்தியில் இந்த தகவல் வெளியாகியுள்ளது.

எனினும் முன்னர் போல இலங்கையை சேர்ந்த சகா இல்லாமல் சீனா தனித்து ஆராய்ச்சிகளில் ஈடுபடுவதற்கான அனுமதியை கோரியுள்ளது. எங்கு ஆராய்ச்சிகளை மேற்கொள்வது என்பதையும் சீனாவே தீர்மானிக்கவுள்ளது என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (நி-5-6)

# பண்டிகைக் காலத்தில் பொருட்களின் விலை குறைக்கப்படும்-அமைச்சர் நளின்

(கொழும்பு)

எதிர்வரும் பண்டிகைக் கால த்தில் அத்தியாவசியப் பொருட்களின் விலை குறைக்கப்படும் என வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஊட கங்களுக்கு கருத்துத் தெரிவிக் கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை, எதிர் வரும் வரவு -செலவுத் திட்டத்தில் அத்தியாவசியப் பொருட்கள் பலவற்றின் விலைகளை குறைக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காசா போர் நிறுத்தத்திற்கு ஐக்கிய நாடுகள் சபை அழைப்பு



(நியூயோர்க்)

இஸ்ரேல்-ஹமாஸ்க்கு இடையிலான உடனடி போர் நிறுத்தத்திற்கு ஐக்கிய நாடுகள் சபை மற்றும் 18 இலாப நோக்கற்ற அமைப்புகளின் தலைவர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

மேலும் மோதலினால் அதிகரித்து வரும் இறப்பு எண்ணிக்கையில் அதிர்ச்சி அடைவதாகவும் அவர்க்ள் குறிப்பிட்டுள்ளனர்.

தன்னார்வ தொண்டு நிறுவன தலைவர்கள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட கூட்டு அறிக்கையிலேயே இந்த விடயத்தை தெரிவித்துள்ளனர்.

யுனிசெப், ஐ.நா பெண்கள் அமைப்பு, உலக உணவுத்திட்டம், உலகசுகாதார அமைப்பு மற்றும் சிறுவர் பாதுகாப்பு நிதியம் ஆகியவற்றின் தலைவர்கள் உட்பட UN மற்றும் NGO தலைவர்கள், கடந்த மாதத்தில் இஸ்ரேலியர்கள் மற்றும் பாலஸ்தீனியர்களின் கொலைகளை கொடூரமானவை என்று விபரித்துள்ளனர்.

சுமார் 9,770 பாலஸ்தீனியர் பொதுமக்கள், காசா மீது இஸ்ரேல் நடத்திய குண்டு தாக்குதலில் கொல்லப்பட்டதாக ஹமாஸ் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (நி-5-6)

## காசாவை சுற்றி வளைத்த இஸ்ரேல் படைகள்

### துண்டாடப்பட்டுள்ள காசா



(காசா)

காசா பகுதி முழுவதும் கடும் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருவதாகவும் இதனால் காசா பகுதி "இரண்டு துண்டாக்கப்பட்டுள்ளது" என இஸ்ரேல் இராணுவம் அறிவித்துள்ளது.

இதனை இஸ்ரேல் இராணுவ ஊடகப் பேச்சாளர் டேனியல் ஹகாரி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில், இஸ்ரேலிய படைகள் காசா நகரை சுற்றி வளைத்துள்ளன என்றும் இப்போது தெற்கு காசா மற்றும் வடக்கு காசா என்று இரண்டும் துண்டாக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் 7 ஆம் திகதி இஸ்ரேல் மீது ஹமாஸ் போராளிகள் தாக்குதல் நடத்தினர். இதை தொடர்ந்து, காசா மீது இஸ்ரேல் போர் தொடுத்தது.

ஹமாஸ் போராளிகளை ஒட்டு மொத்தமாக ஒழிப்போம் என்ற சபதத்துடன் இஸ்ரேல் போரை தொடர்ந்து வருகின்றது.

இந்த போரில் காசாவில் மட்டும் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 11 ஆயிரத்தை நெருங்கி வருகின்றது. இவர்களில் 60 சதவீதத்துக்கும் அதிகமானோர் சிறுவர்கள் மற்றும் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## ஒரு தடவை வீசினால்

# பேரழிவை ஏ

# அணுகுண்டு தயாரி

## கலக்கத்தில் ரஷ்யா

**(வோஷிங்டன்)**

**ரஷ்யாவை இலக்காக கொண்டு லட்சக்கணக்கிலான மக்க கூடிய பி 61-13 அணுகுண்டை அமெரிக்கா தயாரித்து இரண்டாம் உலகப்போரின் போது ஹிரோஷிமாவில் வீசப்பட் விட இது 24 மடங்கு சக்தி வாய்ந்தது என சர்வதேச ஊடக வெளியிட்டுள்ளது.**



மொஸ்கோவில் அத்தகைய குண்டு வெடிப்பது "குறிப்பிடத்தக்க பேரழிவை" ஏற்படுத்துவதுடன் 3 லட்சத்திற்கும் அதிகமான மக்களைக் கொல்லக்கூடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குண்டு வெடித்த இடத்திலிருந்து ஒரு மைல் தொலைவில் உள்ள அனைவரையும் கொல்வதுடன், கட்டடங்களும் அழிந்துவிடும். ஒரு மாதத்தில், 2 மைல்

## கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையை சோதனை செய்த ரஷ்யா

(மொஸ்கோ)

புதிய அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பலில் இருந்து அணுஆயுதங்களை சுமந்து செல்லும் வகையில் வடிவமைக்கப்பட்ட கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை வெற்றிகரமாக சோதனை ஏவப்பட்டதாக ரஷ்யப் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

உக்ரைன் சண்டை தொடர்பாக ரஷ்யா மற்றும் மேற்கு நாடுகளுக்கு இடையே பதற்றம் அதிகரித்து வரும் நிலையில் இந்த அறிக்கை வெளியாகியுள்ளது.

கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை, ரஷ்யாவின் வடக்கு கடற்கரையில் உள்ள வெள்ளைக் கடலில் உள்ள நீருக்கடியில் இருந்து ஏவப்பட்டுள்ளது.

ரஷ்ய தூர கிழக்கில் உள்ள கம்சட்கா தீபகற்பத்தில் ஆயிரக்கணக்கான கிலோ மீற்றர் தொலைவில் உள்ள இலக்கை தாக்கியது.



ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் கடந்த வாரம் உலகளாவிய அணுசக்தி சோதனை தடைக்கான ரஷ்யாவின் ஒப்புதலை ரத்து செய்யும் மசோதாவில் கையெழுத்திட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ால் லட்சம் பேர் காலி
# ஏற்படுத்தும்
# ...ரிப்பில் அமெரிக்கா

## ...பா

...ா மக்களை கொல்லக் ...ித்து வருவதாகவும் ...ப்பட்ட வெடிகுண்டை ... ஊடகங்கள் செய்தி



கள் சுற்றுப்பகுதியில் உள்ள நபர்கள் உயிரிழந்து விடுவார்கள். அந்த அளவுக்கு கதிரியக்க வெளிப்படுதல் இருக்கும் என பாதுகாப்புத்துறை கடந்த வாரம் அறிவித்திருந்தது.

மேலும், B61-13 எதிரிகளை தடுப்பதை வலுப்படுத்தவும் நட்பு நாடுகளின் உறுதியை வலுப்படுத்தவும் வடிவமைக்கப்பட்டுள்ளது என பென்டகன் குறிப்பிட்டுள்ளது.

இந்த வெடிகுண்டு, அதிகபட்சமாக 340 கிலோ தொன் TNT திறனை தரக்கூடியது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவற்றில் தப்பி பிழைப்பவர்களில் 15 சதவீதத்தினர் கொடிய நோய் தாக்குதலால் பிற்காலத்தில் உயிரிழக்க கூடும். மொத்தம் 8.6 லட்சம் பேருக்கு காயமேற்படும் என அதுபற்றிய அறிக்கை தெரிவிக்கின்றது.

உக்ரைனுக்கு எதிரான ரஷ்யாவின் போரானது ஒன்றரை ஆண்டுகளாக நீடித்து வருகிறது.

உக்ரைனுக்கு ஆதரவாக அமெரிக்கா, இங்கிலாந்து உள்ளிட்ட நாடுகள் செயற்பட்டு வருவதோடு இதற்காக நிதி, ஆயுத உதவிகளையும் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## காசாவிற்கு தொடர்ந்தும் ஆதரவு மீண்டும் துருக்கி தெரிவிப்பு



(அங்காரா)

இஸ்ரேல்-ஹமாஸ் போர் நிறைவடைந்ததன் பின்னர் பாலஸ்தீனியத்தின் சுதந்திரமான, இறையாண்மை கொண்ட ஒரு பகுதியாக காசா இருக்க வேண்டும் என துருக்கி ஜனாதிபதி தையிப் எர்டோகன் தெரிவித்துள்ளார்.

காசா தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

காசாவில் மனிதாபிமான நெருக்கடி தீவிரமடைந்துள்ள நிலையில் இஸ்ரேலின் செயற்பாடுகளுக்கு கண்டனம் வெளியிட்டுள்ளதுடன் ஹமாஸ் நாட்டு மக்களை தொடர்ந்தும் துருக்கி ஆதரிக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் குறித்த போர் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்றும் 1967 எல்லைகளுக்கு இணங்க, கிழக்கு ஜெருசலேமை தலைநகராகக் கொண்ட பாலஸ்தீனத்தின் ஒரு பகுதியான காசாவை பிராந்திய ஒருமைப்பாட்டுடன் காண விரும்புவதாகவும் தெரிவித்துள்ளார். (நி-5-6)

## காசாவை நோட்டமிடும் அமெரிக்க ட்ரோன் கமராக்கள்



(காசா)

காசா மீது ஆளில்லா ட்ரோன் விமானங்களைப் பயன்படுத்தி ஹமாஸ் வசமுள்ள பணயக் கைதிகளை கண்டுபிடிக்க MQ-9 Reaper ட்ரோன்களை பயன்படுத்தி வருவதாக அமெரிக்க இராணுவம் தெரிவித்துள்ளது.

மணிக்கு 440 கி.மீ வேகத்தில் செல்லும் இந்த ட்ரோன் விமானம் தொடர்ச்சியாக 27 மணிநேரம் வானில் பறந்தபடி ஏவுகணை தாக்குதல் நிகழ்த்தக்கூடிய வல்லமை படைத்தது.

அதனுள் உள்ள அதிநவீன தெர்மல் சென்சார் கமராக்கள் மூலம் 25 ஆயிரம் அடி உயரத்திலிருந்தபடி மனித உடலின் வெப்பத்தை வைத்து பணயக் கைதிகளின் இருப்பிடத்தை கண்டுபிடித்து இஸ்ரேல் இராணுவத்திற்கு தகவல் அளிக்கும் எனக் கூறப்படுகிறது.

ஒரு மணி நேரம் போர் விமானங்களை இயக்க ஆறரை இலட்ச ரூபாய் செலவாகும் நிலையில் பாதி செலவில் இவற்றை இயக்கி விடலாம் என அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (நி-5-6)

## உக்ரைன் - இஸ்ரேல் ஜனாதிபதிகளுக்கு இடையிலான சந்திப்பு விரைவில்

(கீவ்)

உக்ரைன் மற்றும் இஸ்ரேல் ஜனாதிபதிகளுக்கு இடையே சந்திப்பை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் இடம்பெறுவதாக இஸ்ரேலிய செய்தித்தாள் செய்தி வெளியிட்டுள்ளது.

அமெரிக்காவின் உதவியுடன் குறித்த சந்திப்பு இடம்பெறவுள்ளதாக எதிர்பார்க்கபடுகின்றது.

ஈரான் மற்றும் ரஷ்யா ஆதரவாளர்களுக்கு எதிராக சிறந்த இராணுவப் படைகளை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டே குறித்த சந்திப்பு இடம்பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



குறித்த சந்திப்பு இடம்பெற்றால் ரஷ்யா - உக்ரைன் போர் ஆரம்பித்ததன் பின்னர், உக்ரைன் ஜனாதிபதி வெலோடிமிர் ஜெலென்ஸ்கி இஸ்ரேலுக்கு பயணிப்பது இதுவே முதல் சந்தர்ப்பம் என்றும் செய்தித்தாள் தெரிவித்துள்ளது. (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண மட்ட 2 ஆவது சுற்றுக்கு தகுதியான ஓல்ட்கோல்ஸ் அணி



சிறிலங்கா கிரிக்கெட் பிரிவு III-2023 தொடரின் இறுதிப் போட்டியில் ஓல்ட்கோல்ஸ் அணி வெற்றி பெற்று மாகாண மட்டத்தில் 2 ஆவது சுற்றுப்போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.

கடந்த மாதம் 28 ஆம் திகதி சென்பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் ஓல்ட்கோல்ஸ் அணிக்கும், டிறைற்ரேன் இடையில் நடைபெற்றது.

நாணய சுழற்ச்சியில் வெற்றி பெற்ற டிறைற்ரேன் அணி துடுப்பாட்டத்தை தெரிவு செய்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய டிறைற்ரேன் அணி 47.2 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 157 ஓட்டங்களை பெற்றனர். உதயசாந்-38 டிசாகான்-30, அருணீகன்-26 ஓட்டங்களை பெற்றனர். பந்து வீச்சில் ஓல்ட்கோல்ஸ் அணியை சார்ந்த எஸ். மதூஸன் 10 ஓவர்களில் 22 ஓட்டங்களை கொடுத்து 3 இலக்குகளையும், எஸ். நிரோஸன் 10 ஓவர்களில் 26 ஓட்டங்களை கொடுத்து 3 இலக்குகளையும், இன்துஜன் 10 ஓவர்களில் 32 ஓட்டங்களை கொடுத்து 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

158 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய ஓல்ட்கோல்ஸ் அணி 37.4 ஓவர்களில் 5 இலக்குகளை இழந்து 158 ஓட்டங்களை பெற்று 5 இலக்குகளால் வெற்றி பெற்று மாகாண மட்டத்தின் 2 ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளனர்.

நிரோஸன்-50, மதூஸன்-25, சண்-30 ஓட்டங்களை பெற்றனர்.

பந்துவீச்சில் டிறைற்றோன் அணியை சார்ந்த அபிராம் 8 ஓவர்களில் 33 ஓட்டங்களை கொடுத்து 2 இலக்குகளையும் கஜாணன் 7 ஓவர்களில் 22 ஓட்டங்களை கொடுத்து 2 இலக்குகளையும் கைப்பற்றினர். போட்டியின் ஆட்ட நாயகனாக ஓல்ட்கோல்ஸ் அணியை சார்ந்த எஸ். நிரோஸன் தெரிவானார். (நி-5-6)



போட்டியின் ஆட்ட நாயகன்

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2955

வதனன்

துணிமணி வந்துட்டாக...
மட்டன்,சிக்கன் வந்துட்டாக...
ஸ்வீட் பலகாரம் வந்துட்டாக...
பட்டாசு மத்தாப்பெல்லாம் வந்துட்டாக...
வாம்மா போனசு...



திலான்

கெத்தா நடந்து போறான்..கனடா விசாக்கு பிங்கர் வைக்க போறான் போல...



நான் அங்கர் வாங்க கூட காசில்லாம திரியுறன்... இவளவ வேற...

சாமந்தி

குக்கர் விசில் அடிக்கும்போதே அது எத்தனையாவது விசில்னு சொல்றா மாதிரி மாடல் இருக்கா? ஏன்னா மொபைல் பாத்திட்டிருக்கும்போது கணக்கு வச்சிக்கிறது கஷ்டமா இருக்கு... அது தான்...



நிதர்சன்

ஜோசியரே நமக்கு எப்படியும் போனஸ் வராது போல...



அதனால எவன் எனக்கு கடன் குடுப்பான் கிளியே கேட்டு சொல்லு எவன் சிக்கிறான்னு பாப்போம்.

கஸ்தூரி

போனஸ்- வரல வரல வரல
தீபாவளி-வருது வருது வருது...



ருக்ஷாயினி

தீபாவளி ஷாப்பிங் போது மனைவிக்கு தெரிவது



நமக்கு தெரிவது

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாலைதீவில் 'இந்தியாவே வெளியேறு' முழக்கத்துடன் சீனசார்பு முகமது முய்ஜு ஜனாதிபதியாகத் தெரிவு

02

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.



ஆனால், நாம் வெளிப்படையாக எமது பிரசன்னத்தைக் காண்பித்துக் கொள்ளவில்லை. அந்த மக்களது கலாசாரம் மற்றும் வாழ்க்கைமுறையை நாம் மதித்து நடப்பதை உறுதி செய்து கொண்டோம் என்று வினோத் பாதியா மேலும் கூறியிருந்தார்.

இருந்தாலும் தலைநகர் மாலியில் இருக்கும் முன்னாள் மாலைதீவு அரசாங்க அதிகாரி ஒருவர் இந்தியாவின் இராணுவப் பிரசன்னம் தொடர்பான அதிருப்தி ஆழமான வரலாற்று வேர்களைக் கொண்டது என்று கூறினார்.

1976ஆம் ஆண்டில் மாலைதீவிலிருந்து பிரிட்டிஷ் துருப்புக்கள் வாபஸ் பெறப்பட்டதைத் தொடர்ந்து நாட்டின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்தவையாக அமைந்திருக்கும் தீவுக்கூட்டங்களில் எந்த வெளிநாடும் இராணுவத்தளங்களை அமைப்பதற்கு அனுமதிக்கப்படவில்லை என்றும் ஆனால் இந்தியா மாத்திரமே தொடர்ந்தும் இராணுவப்பிரசன்னத்தைக் கொண்டிருக்கிறது என்றும் குறிப்பிட்டார்.

மாலைதீவில் தரித்து நிற்கும் இந்திய ஹெலிகொப்டர்கள் முதலில் 2013 இல் ஒரு அன்பளிப்பாகவே வழங்கப்பட்டது. அந்த நல்லெண்ண சமிக்ஞை அந்த நேரத்தில் மாலைதீவில் பெரிதும் வரவேற்கப்பட்டது என்று அரசாங்கத்துடன் முன்னர் பணியாற்றிய மாலைதீவு விமானப்போக்குவரத்துத்துறை நிபுணர் ஒருவர் தன்னை அடையாளப்படுத்த வேண்டாம் என்ற நிபந்தனையுடன் ஏசியா டைம்ஸிற்கு கூறினார்.

அந்த நேரத்தில் மாலைதீவு அதன் இராணுவ விமானசேவை ஆற்றல்களை விரிவாக்க நாட்டம் கொண்டிருந்தது. ஆனால், அதற்கான வசதிகள், வளங்கள் இருக்கவில்லை. மாலைதீவு அதிகாரிகள் பயிற்றுவிக்கப்படும் வரை உபகரணங்களை இயக்குவதற்கு இந்திய விமானிகள் இணங்கிக் கொண்டார்கள். அந்த ஹெலிகொப்டர்களை மாலைதீவிடம் கையளித்துவிட்டு இந்தியத்துருப்புக்கள் வாபஸ் பெறாமைக்கான குற்றப் பொறுப்பு முன்னாள் ஜனாதிபதி முகமது நஷீதின் நிர்வாகத்திற்கே உரியது என்று அந்நாட்டின் முன்னாள் பாதுகாப்பு மற்றும் தேசிய பந்தோபஸ்த்து அமைச்சரான அடம் ஷரீப் உமர் கூறினார்.

இந்திய இராணுவப் பிரசன்னம் தொடர்பான பதற்றங்களைத் தணிக்கும் ஒரு முயற்சியாக இந்தியக் கடற்படை அறிக்கையொன்றை விடுத்தது. அரசாங்கங்களுக்கு இடையிலான உடன்படிக்கையின் பிரகாரம் டோனியர் ஹெலிகொப்டர் மாலைதீவு தேசிய பாதுகாப்புப் படைக்கு வழங்கப்பட்டதாக அதில் கூறப்பட்டிருந்தது.

அந்த ஹெலிகொப்டர் ஹனிமாதூ என்ற தீவில் அமைந்திருக்கும் வடக்கு மாலைதீவு தளத்தில் தரித்து நிற்பதாகவும் மாலைதீவு தேசிய பாதுகாப்புப் படையின் கட்டுப்பாட்டிலேயே அது இருப்பதாகவும் இந்திய அரசாங்கம் அதனை இயக்குவதற்கான செலவுகளை மாத்திரமே பொறுப்பேற்கும் என்றும் கூறப்படுகிறது.

மாலைதீவு விமானிகளும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களும் 2017 ஜூன் மாதத்திலிருந்து அத்தகைய ஹெலிகொப்டர்களை இயக்குவதற்கான பயிற்சியைப் பெற்று வருகிறார்கள் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்து சமுத்திரத்தில் செல்வாக்குச் செலுத்துவதற்கான சீன - இந்திய போட்டாபோட்டியினால் தீவிரப்படுத்தப்பட்டிருக்கும் புவிசார் அரசியல் நிலவர மாற்றத்தை அடிப்படையாகக்கொண்டு நோக்குகையில் நவீன இராணுவ தளபாடங்களைக் கொள்வனவு செய்வதன் ஊடாக மாலைதீவு அதன் விமானப்படை ஆற்றல்களைப் பலப்படுத்த வேண்டிய தேவையிருக்கிறது என்பது தெளிவானது.

டோனியர் ஹெலிகொப்டர் சட்டவிரோத மீன்பிடி மற்றும் போதைப் பொருள் கடத்தலுக்கு எதிராக மாலைதீவின் விசேட பொருளாதார வலயத்தைப் பாதுகாப்பதற்குப் பயன்படுத்தப்படும் என்றும் எதிர்காலத்தில் மனிதாபிமான உதவி மற்றும் அனர்த்த நிவாரணப்பணிகளுக்குப் பயன்படுத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இந்தியாவிடமிருந்து கடந்த காலத்தில் செய்யப்பட்ட இராணுவத்தளபாடக் கொள்வனவுகள் பிரச்சினைக்குரியவையாக இருந்தன.

நஷீத் அரசாங்கம் 2010 இல் ஹெலிகொப்டரை பெறுவதற்கு இணங்கிக்கொண்ட பிறகு மாலைதீவு நிலவரங்களுக்கு இந்திய ஹெலிகொப்டர்கள் ஏற்புடையவையா என்பதைப் பரிசோதனை செய்து பார்ப்பதற்குத் தவறிவிட்டதாக விமர்சகர்கள் குற்றஞ்சாட்டுகிறார்கள்.

இரவிலோ அல்லது சீரற்ற கால நிலையின் போதோ அந்த ஹெலிகொப்டர்களை இயக்க முடியாமையினால் நஷீத் நிர்வாகம் இராணுவ விமானசேவை ஆற்றல்களை உகந்தமுறையில் நவீனமயப்படுத்தத் தவறிவிட்டது. அதனால் இந்தியப்படைகள் நிலைவைக்கப்படுவதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது என்று முன்னாள் அமைச்சர் ஷரீப் கூறுகிறார்.

இந்துசமுத்திரத்தில் 800 கிலோமீற்றர்கள் தூரத்திற்குப் பரவியிருக்கும் ஆயிரத்திற்கும் அதிகமான தீவுகள் உலகின் எண்ணெய் கப்பல்களின் போக்குவரத்தில் 40 சதவீதமானவை இடம்பெறுகின்ற கடற்பாதைகள் வரை விரிந்து கிடக்கிறது. அதனால், மாலைதீவு புதுடில்லிக்கும் பெஜ்ஜிங்கிற்கும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

1965 இல் சுதந்திரமடைந்த தற்குப் பின்னரான காலகட்டத்தில் பெரும்பகுதியில் மாலைதீவு இந்தியாவுடன் உன்னதமான உறவுகளைக் கொண்டிருந்த அதேவேளை, சீனாவுடன் திறந்த தொடர்பு வழிகளையும் பேணிவந்தது. ஆனால், அண்மைக்காலமாக தீவுகளை இணைக்கின்ற முக்கியமான பாலங்கள் உட்பட பெரிய உட்கட்டமைப்புத் திட்டங்களுக்கு நிதியுதவி அளிப்பதன் மூலமாக மாலைதீவில் சீனா ஊடுருவல்களை செய்திருக்கிறது. அதனால் இந்தியாவின் செல்வாக்கு பாதிக்கப்பட்டது.

தற்போது மாலைதீவின் வீதிகளில் இடம்பெறும் ஆர்ப்பாட்டங்களின் ஊடாக வெளிப்படுத்தப்படும் இந்திய விரோத உணர்வுகள் நிலவரங்களில் மாற்றத்தைக் கொண்டுவருமா என்பது தெளிவாகத் தெரியவில்லை. ஆனால், கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டிருக்கும் பொருளாதாரத்திற்கு நிதியுதவியைப் பெறுவதற்காக சீனாவுடனான உறவுகளை மீளக் கட்டியெழுப்புவதற்கு ஜனாதிபதி சோலிஹ் இன் அரசாங்கம் உறுதியான முறையில் முயற்சிகளை மேற்கொண்டு வந்ததாக ஏற்கனவே ஊகங்கள் வெளியாகியிருக்கின்றன.

மாலைதீவிடம் போதுமான வளங்கள் இல்லையென்றாலும் இந்துசமுத்திரத்தில் ஆதிக்கம் செலுத்துவதற்காக இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையே தீவிரமடைந்துவரும் புதிய அரசியல் அதிகாரப்போட்டியின் மையமாக அமைந்திருப்பதால் மாலைதீவு மூலோபாய செல்வாக்கைக் கொண்டதாக இருப்பது கவனிக்கத்தக்கது. (நன்றி- https://maatram.org)

இச்சூழலில்தான் மாலைதீவில் 2023 ஆம் ஆண்டு செப்டம்பர் 9 ஆம் திகதியன்று ஜனாதிபதி தேர்தல் நடைபெற்றது. 5.21 லட்சம் பேர் வசிக்கும் இந்த தீவில் மொத்தம் 2,25,486 வாக்காளர்கள் வாக்களித்தனர். இதில் தற்போதைய ஜனாதிபதி இப்ராஹிம் முகமது சோலிஹ்39.05% வாக்குகளை (86,161 வாக்குகள்) பெற்றார். இவர் இந்தியா ஆதரவு நிலைப்பாட்டை கொண்டவர் என்று முன்னர் கூறியிருந்தோம். இவர் பொருளாதாரம் மற்றும் ராணுவத் துறைகளில் இந்தியாவுக்கு முக்கியத்துவம் அளித்து செயற்பட்டு வருகிறார்.

இவரை எதிர்த்து போட்டியிட்ட முன்னேற்றக்கட்சியின் வேட்பாளர் முகமது முய்ஜு 1,01,635 (46.05%) வாக்குகளைப் பெற்றார். இவர்களை விட முன்னாள் ஜனாதிபதி மற்றும் தற்போதைய பாராளுமன்றத் தலைவர் முகமது நஷீதுவின் ஆதரவு பெற்ற இலியாஸ்லபிப் என்ற வேட்பாளர் 15,839 (7.18%) வாக்குகளைப் பெற்றார். இதேநேரத்தில் முகமதுமுய்ஜுவை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சி சீனாவுடன் நெருங்கிய உறவுகளைக் கொண்டுள்ளது.

9ஆம் திகதி நடந்த தேர்தலில் யாரும் 50 சதவிகித வாக்குகளை பெறவில்லை என்பதால் இரண்டாவது சுற்றுத் தேர்தல் நடைபெற வேண்டும். தேர்தல் விதிகளின்படி, முதல் சுற்றில் அதிக வாக்குகள் பெற்ற இருவேட்பாளர்களுக்கிடையே இரண்டாவது சுற்றில் போட்டி இருக்கும். இருவரில் யார் அதிக வாக்குகளைப் பெறுகிறாரோ அவர்தான் மாலைதீவின் ஜனாதிபதி ஆகப் பதவியை ஏற்க முடியும். இதன் பிரகாரம் இரண்டாவது சுற்றுத் தேர்தல் கடந்த செப்டெம்பர் 30ஆம் திகதியன்று நடைபெற்றது.

இரண்டாவது சுற்றுத் தேர்தலில் மக்கள் தேசிய காங்கிரஸ் வேட்பாளரும் மாலே மேயருமான முகமது முய்ஜு54% வாக்குகளைப் (129,159 வாக்குகள்) பெற்று, 46% வாக்குகளைப் பெற்ற (109, 868 வாக்குகள்) தற்போதைய ஜனாதிபதி இப்ராஹிம்முகமது சோலிஹ்யை தோற்கடித்து மாலைதீவின் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

முய்ஜு, சீனா ஆதரவை கொண்டிருக்கிறார். வளர்ச்சிக்கும் பொருளாதார நிலைத்தன்மைக்கும் சீனாவின் ஆதரவு அவசியம் என்று இவர் கருதுகிறார். சர்வதேச அளவில் தற்போது சீனா மிகப்பெரிய பொருளாதார நாடாக வளர்ந்திருக்கிறது. அமெரிக்காவின் செல்வாக்கு வேகமாக சரிந்து வருகிறது. எனவே அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளுடன் கைகோர்த்திருக்கிறது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 2

காவியத் தொடர் 328





அந்தப் பெண் அங்கு நின்றிருந்த காட்சி ஒப்பற்ற ஆற்றல் படைத்த ஓவியக் கலைஞன் ஒருவன் தீட்டிய சித்திரக் காட்சியாகத் தோன்றியது. அவள் உண்மையில் ஒரு பெண்ணாயிருந்தாலும் இந்த உலகத்துப் பெண்ணாயிருக்க முடியாது என்று அந்த வாலிபன் கருதினான். அருகில் நெருங்கினான். ஆனால் அவன் எதிர்பார்த்தது போல் அவள் மாயமாய் மறைந்துவிடவில்லை. எதிர்பாராத விதமாக அவள் ஓட்டம் பிடித்து ஓடினாள். சற்று அவளைப் பின் தொடர்ந்து ஓடிப் பார்த்தான். பிறகு நின்று விட்டான். அவன் மிகக் களைப்புற்றிருந்தபடியால் மானின் வேகத்துடன் ஓடிய அந்தப் பெண்ணைத் தொடர்ந்து அவனால் ஓடவும் முடியவில்லை. மேலும், ஒரு பெண்ணை தொடர்ந்து ஓடுவது அநாகரிகம் என்றும் அவன் எண்ணினான்.

"இந்தச் சிறிய தீவிலே தானே இவள் இருக்க வேண்டும்? மறுபடியும் பார்க்காமலா போகிறோம்" என்று கருதி நின்றுவிட்டான். கடற்கரையோரமாகச் சென்று தெள்ளிய மணலில் படுத்துக் கொண்டு களைப்பாறினான். அவன் எதிர்பார்த்தது வீண் போகவில்லை. சற்று நேரத்துக்கெல்லாம் அந்தப் பெண் திரும்பி வந்தாள். தன்னுடன் ஒரு வயோதிகனான மனிதனையும் அழைத்து வந்தாள். வந்தவன் இலங்கைத் தீவில் கடற்கரையோரத்தில் வாழ்ந்து மீன் பிடித்துப் பிழைக்கும் 'கரையர்' என்னும் வகுப்பைச் சேர்ந்தவன் என்று தெரிந்தது. அவன் மூலமாக அவ்வாலிபன் ஒரு முக்கியமான உண்மையைத் தெரிந்து கொண்டான். அதாவது அந்தப் பெண் தக்க சமயத்தில் அவனுடைய உயிரைக் காப்பாற்றினாள் என்று அறிந்தான். அவன் மரக்கிளையின் மேல் உட்கார்ந்து கடலையே கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தபோது கரடி ஒன்று அவன் பின் பக்கமாக வந்து அவனை உற்றுப் பார்த்தது. பிறகு மரத்தின் மேல் ஏறத் தொடங்கியது. இதையெல்லாம் அந்தப் பெண் பார்த்துக் கொண்டிருந்தாள். கரடியை வேறு திசையில் இழுப்பதற்கும் அந்த வாலிபனை எச்சரிக்கை செய்வதற்கும் அவள் அவ்விதம் கூச்சலிட்டாள். கரடி மரத்தின் மேலே ஏறுவதை விட்டு அவளைத் தொடர்ந்து ஓடத் தொடங்கியது.

இதைக் கேட்டதும் அந்த வாலிபனுக்கு எப்படியிருந்திருக்குமென்று சொல்லவும் வேண்டுமா? தன்னைக் காப்பாற்றிய பெண்ணுக்கு அவன் தன் நன்றியைத் தெரிவித்துக் கொண்டான். ஆனால் அவளோ ஒரு வார்த்தையும் மறுமொழியாகச் சொல்லவில்லை. அவளிடம் வாலிபன் கூறியதற்கெல்லாம் அவளுடன் வந்த மனிதனே மறுமொழி கூறினான். இது வாலிபனுக்கு முதலில் வியப்பாயிருந்தது. உண்மை இன்னதென்று அறிந்ததும் வியப்பு மறைந்தது. அந்தப் பெண் பேசத் தெரியாத ஊமை. அவளுக்குக் காதும் கேளாது என்று அறிந்து கொண்டதும் அவ்வாலிபனுடைய பாசம் பன்மடங்காகியது. பாசம் வளர்ந்து தழைப்பதற்குச் சூழ்நிலையும் சந்தர்ப்பமும் துணை செய்தன. காது கேளாததும் பேசத் தெரியாததும் ஒரு குறையாகவே அவ்வாலிபனுக்குத் தோன்றவில்லை. வாயினால் சொல்ல முடியாத அற்புதமான உண்மைகளையும் அந்தரங்க இரகசியங்களையும் அவளுடைய கண்களே தெரியப்படுத்தின. அந்த நயனபாஷைக்கு ஈடான பாஷை இந்த உலகத்தில் வேறு என்ன உண்டு? அது போலவே காது கேளாததற்கு ஈடாக அவளுடைய நாசியின் உணர்ச்சி அதிசயமான சக்தி வாய்ந்ததாயிருந்தது. அடர்ந்த காட்டின் மத்தியில் வெகு தூரத்தில் மறைந்திருக்கும் காட்டு மிருகம் இன்னதென்பதை அவளுடைய முகர்தல் சக்தியைக் கொண்டே கண்டுபிடிக்க அவளால் முடிந்தது. ஆனால் இதெல்லாம் என்னத்திற்கு? இருதயங்கள் இரண்டு ஒன்று சேர்ந்து விட்டால், மற்றப் புலன்களைப் பற்றி என்ன கவலை? அந்த வாலிபனுக்கு அத்தீவு சொர்க்க பூமியாகவே தோன்றியது.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## மீனவனுக்காக காத்திருந்த பூதம்



ஆல்பர்ட் கடலுக்குள்ள வலையை வீசினான். அவனது படகு சிறியதுதான். அவனது வலையும் அதேபோல சிறியதுதான். ஆனால் அந்த வலை தளும்ப அவனுக்கு எப்போதும் மீன் கிடைக்கும். அவனது அன்றாட வாழ்க்கையை ஓட்டுவதற்கு அது அவனுக்கு போதுமானதாக இருந்தது. ஆல்பர்ட் ஏழையாக இருந்தாலும் மிகவும் தன்மையானவன். அவனுக்கு மனைவி ஜூலியட் இருந்தாள். இவர்களுக்கு குழந்தைகள் இல்லை. சிறிய வீடு தான். ஜூலியட் எப்போதுமே ஆல்பெர்ட்டை குறை கூறி கொண்டே இருப்பாள். ஆனால் அவன் அதை காதில் வாங்கிக்கொள்ளாமல் அமைதியாக கடந்து சென்று விடுவான்.

அன்று காலை உணவை சாப்பிட்டு கொண்டிருந்தான். பின்னாலிருந்து ஒரு குரல், நீ இப்படியே தினனுட்டு இரு. நாளைக்கு திங்க, சமைக்குறதுக்கு விறகு இல்ல. வரும் போது வாங்கிட்டு வா என கடிந்து கொண்டாள். அவன் அமைதியாக தலையை ஆட்டிக் கொண்டு கடலுக்கு கிளம்பினான். வலையை கடலில் வீசினான். வலை அவனை மிஞ்சிய எடையில் அவனால் இழுக்க முடியாமல் இருந்தது. தம் கட்டி இழுத்தான். வலையில் இருந்தது ஒரு குட்டி மீன் மட்டுமே.

அவனுக்கு அதிர்ச்சி, இதுவா இத்தனை கணமாக இருந்தது. அதை எடுத்து அவன் படகில் இருந்த வாளியில் இட்டான். அது ஏதோ வாயசைப்பதை பார்த்து அதனருகில் சென்றான். அது சத்தமாக என்னை விட்டு விடு. உனக்கு என்ன வேண்டுமென்றாலும் செய்கிறேன் என்றது.

அது பார்ப்பதற்கு நல்ல கோல்டன் பிஷ் போல இருந்தது. அது முகத்தை மிகவும் சோகமாக வைத்திருந்தது. இதை கொண்டு போய் விற்றால் யார் வாங்குவார்கள் என்று எண்ணி கொண்டு அதை கடலில் விட்டான் ஆல்பர்ட். உயிர் பிழைத்த மகிழ்ச்சியில் துள்ளி குதித்த மீன் என்ன வேண்டும் என கேட்டது. அவன் வீட்டுக்கு போனால் மனைவி விறகு கேட்பாள். உன்னால் முடிந்தால் அதை மட்டும் கொடு என்றான். மீன், சரி நீ வீட்டுக்கு செல் அங்கு விறகு இருக்கும் என்று சொல்லி கடலுக்குள் சென்றது. ஆல்பர்ட் தயக்கத்துடன் வீட்டுக்கு சென்றான். மீன் சொன்னபடி விறகுகள் வீட்டில் இருக்குமா? இல்லை மனைவி வருந்துவிடுவாளா? என சென்றவனுக்கு மிகுந்த அதிர்ச்சி.

அவனது வீட்டின் ஒரு பகுதி முழுக்க விறகுகளால் நிறைந்து இருந்தது. வீட்டின் உள்ளே சென்று ஜூலியட்டிடம் நடந்தவற்றை கூறினான்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> கலங்காத உள்ளம் படைத்தவர்களே இறுதி வெற்றிக்கு உரியவர்கள்!
>
> – சுபாஷ் சந்திரபோஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இலங்கையை ஏலத்தில் எடுப்பது இந்தியாவா? சீனாவா?

தமிழர்களை வெட்டுவேன் என்கிறார் ஒரு பௌத்த துறவி. பாவம், யாசித்து உண்பதைத் தவிர அந்தச் சாதுவுக்கு உலக நடப்பு எதுவும் தெரியாதென்பது புரிகிறது.

இதுதான் என்றால் இல்லை. ஆதி சிவனாலயங்களை அபகரிக்கின்ற முயற்சியில் பௌத்த பிக்குகளில் ஒரு தரப்பினர் ஈடுபட்டுள்ளனர்.

தவிர, பௌத்த துறவி ஒருவர் ஆளுநர் நடத்துகின்ற கூட்டத்துக்குள் புகுந்து அட்டகாசம் செய்வதைப் பார்த்தபோது, இவர் காவி தரித்த தீவிரவாதியாக இருப்பாரோ என்று எண்ணத் தோன்றியது.

இவ்வாறாக இலங்கையின் அவலத்தைப் புரிந்து கொள்ள முடியாத புத்த பிக்குகள் நாட்டை விரைவாகக் கருவறுக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளனர்.

இதுதவிர நில அபகரிப்பு, சட்டவிரோதமாகத் தனியார் காணிகளில் விகாரை அமைத்தல் என மதவாதப் பேய் ஆட்டிப் படைக்கிறது.

ஆனால் இலங்கையின் பொருளாதார வீழ்ச்சி அந்த நாட்டை உலக நாடுகள் கண்டிக்கவும் தண்டிக்கவும் வைத்துள்ளது.

சுருங்கக்கூறின் பொருளாதார வீழ்ச்சி காரணமாக உலக நாடுகளிடம் பிச்சை எடுக்கும் அளவுக்கு இந்த நாட்டின் நிலைமை வந்துவிட்டது.

வீழ்ந்துபோன பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கு என்ன வழி என்று ஆராய்வதற்கு இங்கு அரசியல்வாதிகளும் இல்லை. புத்திஜீவிகளும் இல்லை.

அரசியல்வாதிகளைப் பொறுத்தவரை, இனவாதத் தீயை நூரவிடமால் பார்க்க வேண்டும். இனவாதத் தீ நூந்துவிட்டால், தாங்கள் விரித்த அரசியல் கடையைப் பூட்ட வேண்டி வரும் என்பது அவர்களின் நிலைப்பாடு.

அதேநேரம் சிங்கள புத்திஜீவிகளோ தமிழர்களின் முன்னேற்றத்தைத் தடுப்பது எப்படி? அவர்களின் பட்டப்படிப்புகளுக்கு ஆப்பு வைப்பது எங்ஙனம் என்பது பற்றியே சிந்திக்கின்றனர்.

இங்குதான் நாட்டின் அபிவிருத்தி பற்றிச் சிந்திப்பதற்கு எவரும் இல்லாத வங்குரோத்து நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலைமை ஏன் ஏற்பட்டது என்பதைக் கூட ஆராய்ந்து அறிய முடியாத ஆட்சித் தரப்பு பிச்சாபாத்திரம் ஏந்தி கிடைத்த யாசகத்தில் எல்லாம் செய்வோம் என்கிறது.

என்ன செய்வது கந்தறு நிலையில் இலங்கையை ஏலம் எடுப்பதற்கு நாடுகள் போட்டியிடுகின்றன.

அதிலும் குறிப்பாக சீனாவுக்கும் இந்தியாவுக்கும் கடும் போட்டி நிலவுகிறது.

ஆம், இலங்கையை ஏலம் போட்டால், அதனைத் தாமே எடுத்துக் கொள்ள வேண்டும் என வியூகம் அமைத்த சீனா; இந்தியாவுக்கு எப்போதும் தமிழ் மக்கள் ஆதரவு வழங்குவர்.

அதேநேரம் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதை இந்தியா கைவிடப் போவதுமில்லை.

ஆக, இந்த இடத்தில் இந்தியாவையும் ஈழத் தமிழ் மக்களையும் பிரித்தாள வேண்டும் என நினைத்த சீனா வடபகுதி மக்களுக்கு வீடு கட்டித் தரப்படும் என அறிவித்துள்ளது.

அட, மலையகத் தமிழ் மக்களுக்கு இந்தியா நிரந்தரமாக வீடுகள் கட்டிக் கொடுக்க சீனாவோ வடபகுதித் தமிழ் மக்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் பிரம்மாஸ்திரத்தை கையிலெடுத்துள்ளது.

என்ன செய்வது இலங்கையை ஏலத்தில் எடுப்பதற்கு எப்படியெல்லாம் வியூகங்கள் அமைக்கப்படுகின்றன என்பதை நினைக்கும் போது தலைசுற்றுகிறது.

# தமிழர்களினுடைய பலத்த எதிர்ப்புக்கு மத்தியில் திருகோணமலையில் இரண்டு புத்தர் சிலைகள்

(திருமலை)

திருகோணமலை நிலாவெளி பிரதான வீதியின் இலுப்பைக்குளம் பகுதியில் தமிழ் மக்களின் எதிர்ப்புக்கு மத்தியில் நிர்மாணிக்கப்பட்டு வந்த பொரலுகந்த ரஜமஹா விகாரைப்பகுதியில் நேற்றுக் காலை பௌத்த பிக்குகள் மற்றும் சிங்கள மக்களினால் இரண்டு புத்தர் சிலைகள் வைக்கப்பட்டுள்ளன.

குறித்த பகுதியில் ஆரம்பத்தில் புத்த விகாரை கட்டுவதற்கான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டுவந்த நிலையில் அதற்கு அப்பகுதி மக்களால் எதிர்ப்பு வெளியிடப்பட்டிருந்தது.

அத்துடன் குறித்த விடயம் தொடர்பாக கிழக்கு ஆளுநரிடம் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் மற்றும் பொதுமக்கள் முறையிட்டதையடுத்து கடந்த ஓகஸ்ட் மாதம் ஆளுநரினால் குறித்த கட்டுமானங்களுக்கு தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

எனினும் தடையுத்தரவையும் மீறி குறித்த பகுதியில் கட்டுமானப் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில் அதற்கு எதிராக பொதுமக்கள் கடந்த 3 ஆம் திகதி ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

இதன் பின்னர் குறித்த பகுதியில் பொரலுகந்த ரஜமஹா விகாரை எனும் பெயர் பொறிக்கப்பட்ட பெயர்ப் பலகை நடப்பட்டு தமிழ் மக்களின் எதிர்ப்புக்கு மத்தியிலும் எவ்வித அனுமதி இல்லாத நிலையிலும் கட்டுமானப் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு நேற்று குறித்த பகுதியில் இரண்டு புத்தர்சிலைகள் வைக்கப்பட்டுள்ளன.

பௌத்த மக்களே இல்லாத, தமிழ் மக்கள் காலாகாலமாக வாழ்ந்து வருகின்ற இப்பகுதியில் இன முறுகலை ஏற்படுத்தும் விதமாகவும் இன விகிதாசாரத்தை மாற்றியமைக்கும் முகமாகவும் சிலர் திட்டமிட்டு செயற்பட்டு வருவதாகவும் புத்த விகாரையின் கட்டுமானங்களைத் தொடர்ந்து இப்பகுதிகளைச்சூழ சிங்கள மக்களை குடியேற்றும் திட்டம் உள்ளதாகவும் மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (நி-5-6)

## கட்டணம் செலுத்தாததால் 7 லட்சம் பாவனையாளர்களுக்கு மின் இணைப்பு துண்டிப்பு

(கொழும்பு)

கடந்த 10 மாதங்களில் மின் கட்டணம் செலுத்தாததால் 7 இலட்சத்து 88 ஆயிரத்து 235 நுகர்வோரின் மின் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடியால் மின் கட்டண அதிகரிப்பு-வரி அதிகரிப்பு, ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி உள்ளிட்ட வாழ்க்கைச் செலவு அதிகரிப்பினால் மின்கட்டணம் செலுத்துவது தற்போது சவாலாக உள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியில் இந்த ஆண்டு அரசாங்கத்தால் மூன்று முறை மின் கட்டணத்தை உயர்த்தப்பட்டுள்ளது.

ஓகஸ்ட் மாதத்தில் அதிகளவான மின்சார விநியோகம் துண்டிக்கப்பட்டதாக மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் பொறியியலாளர் நோயல் பிரியந்த தெரிவித்தார்.(நி-5-6)

# பதிவு செய்யப்படாத நுண்கடன் நிறுவனங்களுக்கு 50 லட்சம் அபராதமும் 5 ஆண்டு சிறைவாசமும்

## நிதி இராஜாங்க அமைச்சர் கடும் எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டில் சுமார் 11,000 நுண்கடன் நிறுவனங்கள் இயங்கி வருகின்ற போதிலும் 5 நிறுவனங்களே பதிவு செய்யப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

பெரும்பாலும் கிராமப்புற குறைந்த வருமானம் பெறுபவர்களை கையாளும் இந்த நிறுவனங்களின் செல்வாக்கு காரணமாக சுமார் 30 லட்சம் பேர் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, இந்த நிறுவனங்களை பதிவு செய்வது கட்டாயமானது என்றும் நுண்நிதி நிறுவனங்களை ஒழுங்குபடுத்துவதற்கு புதிய அதிகார சபை ஸ்தாபிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அனைத்து நுண்கடன் நிறுவன்ங்களும் பதிவு செய்யப்பட வேண்டும். அவை மத்திய வங்கியின் விதிமுறைகளுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.

இந்த சட்டத் தேவையை பூர்த்தி செய்யாதவர்களுக்கு 50 லட்சம் அபராதம் மற்றும் 5 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்படும் என அமைச்சர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.(நி-5-6)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை **புதன்கிழமை காலை 08.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை வவுனியா பிரதேசத்தில்** மகாறம்பைக்குளம், அழகல்ல (தீருவேகம), அளுத்கம, கல்குண்டாமடு ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

**வடமாகாண மரநடுகை மாதம்**

**கார்த்திகை - 2023**

**"ஒரு மரம் பட்டுப்போகுமாக இருந்தால் பட்ட அந்த மரத்துக்குப் பதிலாக அவ்விடத்தில் இன்னொரு மரத்தை நாட்டுங்கள்"**

*-கரோலஸ் இலினேயஸ்(தாவர வகைப்பாட்டியலாளர்)*

## அமெரிக்க அதிகாரி இலங்கை விஜயம்

(கொழும்பு)

அமெரிக்க சர்வதேச அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஸ்கொட் நேதன் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

கொழும்பு துறைமுகத்தில் இடம்பெறவுள்ள அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தின் முக்கிய உட்கட்டமைப்பு முதலீட்டுக்கான ஆரம்ப நிகழ்வில் பங்குபற்றுவதற்காகவே அமெரிக்க சர்வதேச அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஸ்கொட் நேதன் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

இலங்கை வரும் ஸ்கொட் நேதன் நாட்டின் உயர்மட்ட வர்த்தக மற்றும் அபிவிருத்தி வங்கிகளின் தலைவர்களையும் சந்திக்கும் அதேவேளை, அரசாங்கத்தின் உயர்மட்ட அதிகாரிகளுடனும் பேச்சுக்களில் ஈடுபடுவார். (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்
## வழங்குநர்களையும் ஒப்பந்ததாரர்களையும் பதிவு செய்தல் - 2024

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் பொருட்கள், சேவைகளை வழங்குவதற்கு விருப்பமுடைய வழங்குநர்கள், ஒப்பந்ததாரர்கள், அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் என்பனவற்றிடமிருந்து 2024 ஆம் ஆண்டிற்குப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதற்கான விண்ணப்பப்படிவங்களை கீழ்வரும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய தயாரித்து ஒவ்வொரு விண்ணப்பதாரியும் மீளளிக்கப்படாத வைப்புப் பணம் ரூபா 1.000.00 ஐ எமது அலுவலக காசாளரிடம் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை அல்லது பணிப்பாளர், போதனா வைத்தியசாலை. யாழ்ப்பாணம் என்னும் பெயருக்குப் பெறப்பட்ட பிரதான அஞ்சல் அலுவலகம் யாழ்ப்பாணத்தில் காசாக்கக்கூடிய காசுக்கட்டளையை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து தபாலுறையில் இட்டு இடது பக்க மேல் மூலையில் **"வழங்குநர்கள் பதிவு செய்தல்-2024"** எனக் குறிக்கப்பட்டு, பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு 2023.12.07 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத்தபால் மூலம் அல்லது நேரடியாக அலுவலகத்தில் கையளிக்கலாம். மேலும் இது தொடர்பான விபரங்களை யாழ்.போதனா வைத்தியசாலை மின்னஞ்சலில் www.thjaffna.lk பார்வையிடலாம்.

| உருப்படி இல | பொதுப்பொருட்கள் |
|---|---|
| A – 01 | அலுவலக காகிதாதிகள், எழுதுபொருட்கள், மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்கள். |
| A – 02 | தளபாடங்களும், அலுவலக உபகரணங்களும் (மரம், உருக்கு, பிளாஸ்ரிக், பைவர் போன்றவை) |
| A – 03 | கணனிகள் கணனியுடன் தொடர்புடைய ஏனைய உபகரணங்கள், போட்டோபிரதி இயந்திரம், இலத்திரனியல் பிரதிபண்ணும் இயந்திரங்கள் (Duplo), CCTVகமராக்கள், றோனியோ இயந்திரம், தொலைநகல் இயந்திரம் இவற்றுடன் தொடர்புடைய ரோனர்கள், றிபன்கள் என்பன. |
| A – 04 | யன்னல் திரைச்சீலைகள், சீருடைகள் மற்றும் துணிவகைகள். |
| A – 05 | குளியலறைப் பொருத்திகள், மாபிள் வகைகள், நீர்க்குழாய்கள், இணைப்புக்கள் மற்றும் அதனோடிணைந்த பொருட்கள். |
| A – 06 | சகலவிதமான வீட்டுப்பாவனைப் பொருட்கள் (வாளி, ஜக், கேத்தல், பீங்கான் பொருட்கள், கண்ணாடிப் பொருட்கள், பிளாஸ்டிக் பொருட்கள் போன்றவை) |
| A – 07 | தும்புமெத்தை, இறப்பர் மெத்தை, மெக்கின்ரோஸ், எலாஸ்டிக், நைலோன் நூல் மற்றும் பஞ்சினாலான தலையணைகள் போன்றவை. |
| A – 08 | கட்டட, இரும்புப் பொருட்கள், பெயின்ற், வாணிஸ் மற்றும் சகல ஹாட்வெயர் பொருட்கள் மணல், கல், தீராந்தி, சலாகை போன்றவை. |
| A – 09 | மின்சாரப் பொருட்கள், அதன் உதிரிப்பாகங்கள், மின் மோட்டர்கள், மின்பல்புக்கள், மின் விசிறிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய பொருட்களும். |
| A – 10 | புற்பாய், தும்புத்தடி. விளக்குமாறு, கால் துடைப்பம், மொப்பர் மற்றும் ஏனையவை. |
| A – 11 | எல்லாவிதமான காபோலிக் சவர்க்காரம், இயந்திரத்தில் துணிதுவைக்கும் தூள், பார் சவர்க்காரம், சுத்தப்படுத்துவதற்கான திரவ வகைகள், சவர்க்காரத்தூள், சேவிங் பிளேட் மற்றும் ஏனையவை. |
| A – 12 | டயர், டியூப், பற்றிகள், மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள். |
| A – 13 | தோல் உற்பத்திப் பொருட்கள் - சப்பாத்துக்கள், சிலிப்பர்கள், எல்லாவிதமான பாதணிகள். |
| A – 14 | குளிர்சாதனப் பெட்டிகள், காற்றுக் குளிராக்கிகள், தொலைக்காட்சிப் பெட்டிகள், DVD player மற்றும் அதன் உதிரிப்பாகங்களும். |
| A – 15 | சகலவகையான ரெக்சீன் துணிகள், பொலித்தீன் பைகள், கழிவகற்றும் பொலித்தீன் பைகள் போன்றவை. |
| A – 16 | இறப்பர் முத்திரை வகைகள், பிளாஸ்ரிக் பெயர்ப்பலகை, தினமுத்திரைகள் தயாரித்தல். |
| A – 17 | பால்மா வகைகள் மற்றும் ஊட்டச்சத்துப் பானங்கள். |
| A - 18 | LP வாயு மற்றும் வாயுறெகுலேட்டர், காஸ் பனர், காஸ் குழாய். |
| A - 19 | சத்திரசிகிச்சைக்கு தேவையான தைத்த உடுப்புகள் (வைத்தியர், தாதியினர், சிரேஷ்ட ஊழியர்கள், நுளம்புவலை, கட்டில் விரிப்பு. தலையணை உறை, GS Towel) |
| A – 20 | அலுவலக அடையாளஅட்டை மற்றும் பெயர்ப் பலகை தயாரித்தல். |
| A – 21 | மருந்துகள் இடும் உறை/ Xகதிர் அட்டை இடும் உறை மற்றும் அச்சிடல் வேலைகள் போன்றவை. |

| உருப்படி இல | மருத்துவப் பொருட்கள் |
|---|---|
| B-01 | சத்திரசிகிச்சை, மருத்துவ உபகரணங்கள் போன்றவை. |
| B-02 | ஆய்வுகூட உபகரணங்கள். |
| B-03 | சத்திரசிகிச்சை, மருத்துவ ஆய்வுகூட நுகர்வுப் பொருட்கள் (biopsy needles, catheter, Distill water, surgical spirit, & other such things etc) |
| B-04 | பதிவு செய்யும் சுருள்கள் [Recording Paper] (ECG, ETT, CTG, EEG recording paper & other such things) |
| B-05 | சத்திரசிகிச்சைப் பாதுகாப்புப் பொருட்கள், இரசாயனப் பொருட்கள், மருந்து வகைகள், சத்திரசிகிச்சைத் துணையுறுப்புகள்/ X கதிர் போன்றவை. |

| உருப்படி இல | சேவைகள் |
|---|---|
| C – 01 | உருக்கு மற்றும் மரத்தளபாடங்கள் திருத்தம் செய்தல் போன்றவை. |
| C – 02 | மின் உபகரணங்கள் திருத்தம் செய்தல் ( காற்றுக் குளிராக்கி, குளிர்சாதனப்பெட்டி, தொலைகாட்சிப் பெட்டிகள் அதனோடிணைந்த உபகரணங்கள்) |
| C – 03 | மின் மோட்டர்கள், நீர் இறைக்கும் இயந்திரங்கள், மின்விசிறிகள், ஜெனரேட்டர்கள் திருத்துதலும், மீளமுறுக்குதலும் (Rewinding) |
| C – 04 | அலுவலகஉபகரணங்கள் திருத்துதல் (கணனி, Duplo இயந்திரம்,புகைப்படபிரதி இயந்திரம், Fax இயந்திரம்) |
| C – 05 | பத்திரிகை விளம்பரம் பிரசுரித்தல். |
| C – 06 | சலவை சேவைகள். |
| C – 07 | காற்றுக் குளிராக்கி பராமரித்தல் - Air Conditioner Maintenance |
| C – 08 | உள்ளக தொலைபேசி மற்றும் உள்ளக வலையமைப்பு பராமரித்தல் - Intercom Maintenance |
| C – 09 | வாயுஅடுப்பு, வாயு மற்றும் ஒட்சிசன் உபகரணங்கள் திருத்துதல் |
| C – 10 | வீட்டு உபயோகப் பொருட்கள் திருத்துதல், பொலிசிங் செய்தல், கதிரை பின்னுதல் |
| C – 11 | வைத்தியசாலை உபகரணங்கள், சத்திரசிகிச்சை உபகரணங்கள் திருத்துதல் |
| C - 12 | தையல் வேலைகள். |
| C - 13 | கழிவுகளை அகற்றுதல் தொடர்பான சேவை |

| உருப்படி இல | வாகனத்திருத்தமும் சேவிஸ் செய்தலும் |
|---|---|
| D – 01 | சகலவிதமான வாகனங்கள் திருத்துதல், வாகன மின்சார, குளிரூட்டி திருத்த வேலைகள், சீற், குசன் வேலைகள் போன்றவை. |
| D – 02 | சுகல விதமான வாகனமும் சுத்திகரிப்புச் செய்தல். |

| உருப்படி இல | வேலைகள் |
|---|---|
| E – 01 | கட்டிடநிர்மாணம், கட்டிடபுனரமைப்பு, கட்டிடத் திருத்தங்கள் போன்றவை (கட்டுமாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தில் (ICTAD) பதிவு செய்யப்பட்ட செல்லுபடியாகும் காலத்திற்குரிய பிரதி இணைக்கப்படல் வேண்டும்) |
| E – 02 | அலுமினிய நிர்மாண வேலைகள். |
| E – 03 | தொலைபேசி இணைப்பு மற்றும் உள்ளக வலையமைப்பு போன்றவை. |

| உருப்படி இல | அகற்றப்படும் பொருட்களை விற்பனை செய்தல் |
|---|---|
| F – 01 | (கண்ணாடி, பிளாஸ்டிக் போத்தல், அலுமினியப் பாத்திரம், X-கதிர் அட்டை, X -கதிர் கழுவும் திரவம், சிரட்டை, டயர், டியூப், சமையல் அறையில் அகற்றப்படும் சகலவிதமான பொருட்கள் அட்டை, கடதாசி மற்றும் கடதாசிப் பெட்டிகள் போன்றவை) |

| உருப்படி இல | உணவுப் பொதிகள் மற்றும் குளிர்பான வகைகள் |
|---|---|
| G – 01 | (சிற்றுண்டி வகைகள், உணவுப்பொதிகள் மற்றும் குளிர்பானங்கள் போன்றவை) |

### விதிமுறையும் நிபந்தனைகளும்

01. வழங்கல்கள்,சேவைகள் 2024 ஆண்டிற்கு மட்டும் செல்லுபடியானதாகும்.

02. விண்ணப்பதாரர்கள் இலங்கையில் பதிவு செய்யப்படுவதுடன், பதிவு செய்யப்பட்ட வர்த்தக ஸ்தாபனத்தின் தொலைபேசி, தொலைநகல் மற்றும் மின்னஞ்சல் வசதிகளை கொண்டிருத்தல் வேண்டும். (வணிகப் பதிவின் நகல் பிரதி இணைக்கப்படல் வேண்டும்)

03. திருப்திகரமற்ற வழங்கல்கள், சேவைகளை நிராகரிக்கவும் வெளி மூலங்களிலிருந்தும் கேள்வி கோரும் உரிமையும் பணிப்பாளருக்கு உண்டு.

04. ஏதேனும் சந்தர்ப்பங்களில் பதிவுக்காகப் பெறப்பட்ட விண்ணப்பதாரரின் தகுதிகள் திருப்திகரமாக இல்லை என தெரியவரும் போது காரணங்கள் தெரிவிக்காமல் நிராகரிக்கும் உரிமையும் பணிப்பாளருக்கு உண்டு.

05. பொருட்கள் மற்றும் சேவைகளை ஆகக் குறைந்தது ஒருமாத கால கடன் அடிப்படையில் வழங்குவதற்கு இணங்குதல் வேண்டும்.

06. குறித்த தரத்திற்கு மற்றும் மாதிரிக்கு அமைய பொருட்கள் மற்றும் சேவைகளை தேவையான அளவுக்கு குறித்த திகதியில் வழங்குதல் வேண்டும்.

07. அனைத்து வழங்கல்களையும் வைத்தியசாலைக்கு கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும்.

08. வழங்குநர்களைப் பதிவு செய்யும் போது, வியாபாரப் பெயர் பதிவுச் சட்டவாக்கத்தின் கீழ் பதிவு செய்துள்ள வழங்கலுக்கு எதிர்பார்க்கின்ற அனைத்துப் பொருட்களும் வியாபார நிலையங்களில் இருந்தும் சந்தைப்படுத்தப்படுகின்ற மற்றும் தேவையான அனைத்து தகைமைகளையும் பூரணப்படுத்தியுள்ள விண்ணப்பதாரர்கள் மாத்திரம் வழங்குநராக பதிவு செய்யப்படும்.

09. மேலதிக விபரங்கள் பெற விரும்பின் கணக்காளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் தொலைபேசி இலக்கம் 021 222 3149 உடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

10. உருப்படி இலக்கம் B (அறுவைசிகிச்சை மற்றும் மருத்துவப் பொருட்கள்) நீங்கள் பதிவு செய்யும் போது பின்வரும் தகவல்களையும் விண்ணப்பத்துடன் இணைக்க வேணடும்.
    A)தயாரிப்பு எல்லை (Product range)
    B)உற்பத்தியாளர் அங்கீகாரக் கடிதம் (Copy of manufacturer authorization letter)
    C)CDDA நகல்
    D)நிறுவுதல் அடிப்படை -(Installation Base) (இது தொடர்பான மேலதிக தகவல்கள் இருப்பின் அவற்றை சமர்ப்பிக்க முடியும்)

**பணிப்பாளர்,**
**போதனா வைத்தியசாலை,**
**யாழ்ப்பாணம்.**

(சி-7571)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணத்தில்...

குறித்த நபர் கடந்த மூன்று நாட்களாக அந்த தங்குமிடத்தில் தங்கி இருந்தார் எனவும், இந்நிலையில் நேற்றுக் காலை உயிரிழந்த நிலையில், சடலமாக காணப்பட்டதை அடுத்து, விடுதி உரிமையாளரால் யாழ்ப்பாண பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து பொலிஸார் சடலத்தை மீட்டு, உடற்கூற்று பரிசோதனைக்காக யாழ.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்துள்ள நிலையில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,33)

## அமெரிக்கா...

சர் பிரேம ஜயந்தவிற்குமிடையிலான சந்திப்பு நேற்று இடம்பெற்றது.

குறித்த சந்திப்பில் இலங்கை மாணவர்களின் கல்வி தொடர்பில் கலந்துரையாடப்பட்டதாக ஜூலி சங்தனது உத்தியோகபூர்வ எக்ஸ் (டுவிட்டர்) பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"பேராதனை மற்றும் சிகாகோவில் உள்ள இல்லினாய்ஸ் பல்கலைக் கழகத்திற்கு இடையில் நடைபெறவிருக்கும் ஆசிரியர் பரிமாற்றம் உட்பட கல்வி ஒத்துழைப்பு குறித்து கலந்துரையாடினோம்".

மேலும், பாடசாலை மாணவர்களுக்கு ஊட்டச்சத்து, மதிய உணவுகள், கல்வியறிவை ஊக்குவித்தல், பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களுக்கான ஆங்கில கல்வி அறிவு மற்றும் மாணவர்களின் தலைமைத்துவத் திறன்களை வளர்த்தல் போன்ற விடயங்களில் இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து அமெரிக்கா செயற்படவுள்ளதாக ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

இதுபோன்ற செயற்பாடுகளுக்கு வலுவூட்டும் வகையில் அமெரிக்கா இலங்கைக்கு துணை நிற்கும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (ம-7)

## காசாவில்...

போராளிகள் மீது இஸ்ரேல் போர் தொடுத்து வருகின்றது.

காசா பகுதியில் இஸ்ரேலின் தொடர் தாக்குதலில் சிறுவர்கள் உட்பட 10 ஆயிரத்துக்கு அதிகமானோர் இது வரை கொல்லப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. (ம-7)

## தீவகப்...

தீவு உட்பட தீவகப் பகுதிகளுக்கு விஜயம் செய்யவுள்ளனர். (ம-7,33)

## கோட்டாவின்...

யாவின் றோவும் அமெரிக்காவின் சி.ஐ.ஏயுமே செயற்பட்டன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இலங்கையில் நெருக்கடி ஏற்பட்டிருந்த வேளைகளில் இந்தியா உதவி இருந்தாலும், அதன்மூலம் தனக்கு உபாயமார்க்கமாக தேவையான வற்றை அந்நாடு பெற்றுக் கொண்டுள்ளது என்பதே உண்மை. தமது நாட்டு இராணுவத்தை இலங்கைக்கு அனுப்புவதற்காக இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை இந்தியா பயன்படுத்திக் கொண்டது.

கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சி வீழ்வதற்கு இந்தியா உதவி வழங்கியது என்பது உறுதி.

ஊர்ப் பகுதிகளில் வட்டி வியாபாரி போல் பொருளாதாரத்தை விழ வைத்தே இந்தியா உதவி செய்தது.

கோட்டாபய ராஜபக்ஷவை வெளியேற்றிவிட்டு, ரணிலை ஆட்சிக்கு கொண்டுவருவதற்கு இந்தியா தலையிட்டதற்கான சாட்சிகள் உள்ளன. இந்தியாவும் அமெரிக்காவும் ஒரு நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில்தான் செயற்படுகின்றன என்றார். (ம-7)

## தேர்தல்...

அமெரிக்காவின் நியூயோர்க்கில் இடம்பெற்ற புலம்பெயர்ந்த இலங்கையர்களுடனான சந்திப்பின்போதே அவர் இதனை தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைத் தேர்தல்களை அரசாங்கம் ஒத்திவைத்துள்ளதாகவும், மக்களின் நிறைவேற்று அதிகாரத்தை மக்களால் நியமிக்கப்படும் ஜனாதிபதியே பிரயோகிக்க வேண்டுமென அரசியலமைப்பில் தெளிவாக கூறப்பட்டுள்ளது.

"உள்ளூராட்சி சபையின் நிர்வாகத்தை ஆணையாளரின் கீழும் மாகாண சபைகளை ஆளுநர் நிர்வாகத்தின் கீழும் கொண்டு வர முடியும். எனினும் மக்களின் நிறைவேற்று அதிகாரத்தை மக்களால் நியமிக்கப்பட்ட ஜனாதிபதியே பிரயோகிக்க வேண்டும்.

எனவே ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டும். அடுத்த வருடம் ஒக்ரோபர் 17ஆம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதி தேர்தலை தவிர்க்க முற்பட்டால், அவர் ஒக்ரோபர் 17ஆம் திகதிக்கு முன்னதாகவே செல்ல வேண்டும்.

மக்கள் இவ்வளவு கஷ்டங்களை அனுபவித்தாலும் ஏன் வீதிக்கு வருவதில்லை என சிலர் கேட்கின்றனர். மக்கள் காத்துக் கொண்டிருக்கின்றனர். ஜனாதிபதி தேர்தல் நடைபெறும் வரை, தேர்தல் நடத்தப்படாது என்ற சமிக்ஞை கிடைத்தால், மக்கள் வீதியில் இறங்குவார்கள்.

அதிகாரத்தைப் பெற்ற பின்னர் நாட்டைமாற்றியமைப்பதற்கான அனைத்து சக்திகளையும் தேசிய மக்கள் சக்தி உள்ளடக்கியதாக அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (ம-7)

## ரூ.40 இலட்சம்...

கொள்வனவு செய்த நபர் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவர்களிடம் இருந்து ஐஸ் வகை போதை பொருளும் நேற்றுத் திங்கட்கிழமை காலை 11.45 மணியளவில் கைப்பற்றப்பட்டது

மன்னார், புதுக்குடியிருப்பு, எருக்கலம் பிட்டி, தாராபுரம் உட்பட்ட பல பகுதியில் நீண்டகால மாக போதை பொருள் விற்பனை யாளராகவும் விற்பனை முகவராகவும் செயற்பட்ட குறித்த நபர் மன்னார் குற்றத் தடுப்பு புலனாய்வு பிரிவினரால் நேற்று கைது செய்யப்பட்டார்.

குறித்த நபர் தொடர்பில் மன்னார் குற்றப் புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த இரகசிய தகவலின் பிரகாரம் குற்றப்புலனாய்வுப் பிரிவு மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கை பின்போது குறித்த நபர் கைது செய்யப்பட்டதுடன்அவரிடம் போதை பொருளை கொள்வனவு செய்த வரும் கைது செய்யப்பட்டுள்ளார்

கைது செய்யப்பட்ட இருவரும் மன்னார் புதுக்குடியிருப்பு பகுதியை சேர்ந்த 31, மற்றும் 20 வயதுடைய நபர்கள் என்பதுடன் புதுக்குடியிருப்பு பாடசாலைக்கு அருகில் விற்பனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போதே இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்

கைது செய்யப்பட நபர்களிடம் இருந்து 21 கிராம் 9 மில்லி கிராம் ஐஸ் ரக போதைப்பொருள் மற்றும் 50 ஆயிரம் ரூபாய் ரொக்கப்பணம் மற்றும் 2 கைபேசிகளும் மீட்கப்பட்டுள்ளது.

அதேநேரம் பிரதான சந்தேகநபருக்கு 1 கிலோ ஐஸ் போதை பொருள் விற்பனைக்காக வந்த நிலையில் 21 கிராம் போதை பொருளே தற்போது கைப்பற்றப்பட்டுள்ள நிலையில் மிகுதி போதை பொருட்களை தேடும் நடவடிக்கையில் மன்னார் பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினர் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தகது. (ம-7,285)

## சமூகப் பிரதிநிதிகளுடன் சீனத் தூதுவர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்ட சீனத்தூதுவர் நேற்று தனியார் விடுதியில் சிவில் சமூக பிரதிநிதிகளை சந்தித்தார்.

சந்திப்பில் கலந்துகொண்டோர் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பில் சீனா இலங்கைக்கு அழுத்தம் தெரிவிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டனர்.

அதற்குப் பதிலளித்த சீனத் தூதுவர், வெளிநாட்டின் உள்விவகாரங்களில் சீனா தலையிடாது எனத் தெரிவிதார். (ம-7)


கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3532 — சீட்டிழுப்பு திகதி 06.11.2023 — E 11 57 65 71 — E — 47091

தன நிதானய — திகதி 2023.11.06 — சீட்டிழுப்பு இலக்கம் 1320 — F 16 25 50 80 F — 36482

லக்கி 7 — திகதி 06.11.2023 — சீட்டிழுப்பு இலக்கம் 0116 — L7 இலக்கம் 2 3 — வெற்றி இலக்கினம் கும்பம் — வெற்றி இலக்கங்கள் 6 3 9 2 0 3

ஹந்தஹன — சீட்டிழுப்பு திகதி 2023.11.06 — சீட்டிழுப்பு இலக்கம் 599 — மீனம் 02 40 41 47 மீனம் — 39326 — 24

மெகா பவர் — திகதி 06/11/2023 — சீட்டிழுப்பு இலக்கம் 1638 — W 09 14 34 59 68 — 52564

மஹஜன சம்பத — திகதி 2023/11/06 — சீட்டிழுப்பு இலக்கம் 5290 — B 4 2 4 6 6 9

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2264 — வர்ணம் ஊதா — சீட்டிழுப்பு திகதி 2023.11.06 — தினம் திங்கட்கிழமை — 29 52 55 75 W — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 54,784,020/-

சனிதா — திகதி 2023.11.06 — வெற்றி வாரம் 4425 — வர்ணம் இளம் நீலம் — 27 32 40 65 U — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.63,016,868.00

ராசி — சீட்டிழுப்பு வாரம் 3976 — வர்ணம் மஞ்சள் — சீட்டிழுப்பு திகதி 2023.11.06 — தினம் திங்கட்கிழமை — 16 25 38 47 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,968,828/-

கப்ருக — C 16 09 41 45 57 — 1440 — பச்சை — 2023.11.06 திங்கள் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 461,686,604.20

ஜயோதா — திகதி 2023.11.06 — வெற்றி வாரம் 1971 — வர்ணம் செம்மஞ்சள் — 02 32 42 48 Q — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20,327,672.00

அத கோடிபதி — திங்கட்கிழமை — வெற்றி வாரம் 2090 — வர்ணம் சிவப்பு — சீட்டிழுப்பு திகதி 2023.11.06 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.67,205,696/- — 08 33 60 76 I


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## அதிபர் சேவையில் இணைந்த ஆசானுக்கு
# பிறந்ததின நல்வாழ்த்துக்கள்




கிளி/திருவையாறு மகா வித்தியாலயத்தின் ஆசிரியர் பணியில் நிறைவான சேவையை வழங்கி பல்துறை ஆற்றல் கொண்ட அதிபராக பதவி உயர்வு பெற்று கல்விச் சமூகத்திற்கு நிறைவான சேவையை ஆற்றவுள்ள சாதனை நாயகனான அதிபர்

## திரு.இராசதுரை அரவிந்தன்

அவர்களுடைய சேவை சிறக்கவும், இனிய அகவைத்திருநாள் நல்வாழ்த்துக்களையும் குமரன் இசைக்குழு சார்பாக வாழ்த்தி நிற்கின்றோம்.

(C-7574)

வாழ்த்துவோர் :

**குமரன் இசைக்குழு அம்பாள் குளம்**
**கிருஸ்ணகுமார் தனுஜன்(குமரன்)**

---

# NEW SCIENCE HALL

கன்னாதிட்டி வீதி யாழ்ப்பாணம்

**எதிர்வரும் க.பொ.த உயர்தர பரீட்சைக்கான இரசாயனவியல் நேரடி கருத்தரங்கு**

## பௌதீக இரசாயனம் (Physical chemistry)

திரு.க.சிவத்திரன் B.SC (Hons)

பரீட்சைக்கு தோற்றும் அனைத்து மாணவர்களும் கலந்து கொள்ளலாம்.

பௌதீக இரசாயனவியலின் அனைத்து பாடபரப்புக்களும் வினாவிடை மூலம் கலந்துரையாடப்படும்.

| | | |
|---|---|---|
| 13.11.2023 | திங்கட்கிழமை | (10.00 AM - 12.00NOON) |
| 17.11.2023 | வெள்ளிக்கிழமை | (10.00 AM - 12.00NOON) |
| 20.11.2023 | திங்கட்கிழமை | (10.00 AM - 12.00NOON) |
| 24.11.2023 | வெள்ளிக்கிழமை | (10.00 AM - 12.00NOON) |

மாணவர்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும்.

**ஆரம்பம் : 13.11.2023**

(C-7568)

தொடர்புகளுக்கு -
**076 569 3006,076 566 3006**
**077 791 7611**

---

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (17671)

**076 825 7716** (ஆகாஸ்)

---

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378
076 097 3127

---

# VILLAGE HOTEL
## பஸ் சேவை
## JAFFNA EXPRESS

AIRPORT PICK UP DROP SERVICE

வடமராட்சி - யாழ்ப்பாணம் - கொழும்பு
வடமராட்சி - கொடிகாமம் - கொழும்பு
2800/=

(17484)

**T.P:077 544 8503**

---

## வளர்ந்த கினிக் கோழிகள் விற்பனைக்குண்டு

மெமோறியல் வீதி, மானிப்பாய்
J/137 கிராமசேவகர்
அலுவலகத்திற்கு அருகில்

(17687)

**076 634 8343**

---

அமெரிக்க அதிஸ்ட விசா இன்றுடன் நிறைவடைகின்றது
07-11-2023
இறுதி சந்தர்ப்பம் - தவறவிடாதீர்கள்

LOADING

0768226244

55000 இலவச விசாக்கள்

அமெரிக்கா போக கடைசி நாள்

V2 Travels

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 0777469777 | 0743900352 | 0768326337 | 0768226240 | 0777068777 | 0764550670 | 0764550673 | 0768226230 |
| 0768326245 | 0776697960 | 0764550675 | 0768226238 | 0764550671 | 0777718332 | 0777726322 | 0743900353 |
| 0777720322 | 0764550674 | 0776699892 | 0768336243 | V2 TRAVELS | | 0768326236 | |

---

# CANADA
## VISITOR VISA

VISITOR VISA வில் கனடா செல்வதற்குரிய ஆலோசனைகள் மற்றும் Online விண்ணப்பங்கள் விரைவாக செய்து தரப்படும்

CIMS COLLEGE (C-7576)

**0777-068-777**

49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம்

V2 TRAVELS

---

## தரமான காணி விற்பனைக்கு உண்டு

GOLDEN Real Estate

**யாழ்ப்பாணம் கைதடிச் சந்திக்கு அருகாமையில் A9 வீதி முகப்புடன் 51 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.**

- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- நிலப்பரப்பு, நன்னீரூற்று
- வடமாகாண சபை, சித்த மருத்துவமனை ஆகியவற்றிற்கு எதிரே பிரதான வீதியுடனான காணி
- 18 அடி பாதை
- யாழ். பஸ் நிலையத்திலிருந்து 6 km தூரம் மிகவும் நல்லசூழல்,
- குடியிருப்புகள் சூழவுள்ள காணிவீடு கட்டுவதற்கும், களஞ்சியசாலைகள் அமைப்பதற்கும் உகந்த இடம்
- பரம்பரைக்காணி, பல வருடகால தோம்பு, தூய உறுதி
- தரகர் தேவையில்லை.
- பார்வையிடும் நேரம் காலை 06.00 - மாலை 06.00 மணிவரை
- 1 பரப்பின் விலை 24 லட்சம்

**Golden Real Estate (PVT) Ltd**
Director & Owner : T.Kalaithasan

(17688)

**076 755 8606, 077 623 4204**

---

# கண்ணீர் அஞ்சலி



யாழ் எய்ட் நிறுவனத்தின் ஆரம்ப கால உறுப்பினரும் நல்லூர் பிரதேச செயலக பணியாளருமான திருமதி **தர்மினி ரஜீபன்** அவர்களின் அன்பு மாமியார்

## அமரர் படிகலிங்கம் சொர்ணகாந்தி

அவர்களின் பிரிவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(C-7573)

**யாழ் எய்ட்**

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.11.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org